www.penakural.com

மலர்: 02 இதழ்: 02 டிசம்பர் 2023 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM/2022/85375


தமிழ் மாத இதழ்

## மிக்ஜாம் புயல் பாதிப்பு: மக்களின் நிலை என்ன?





## கல்வி, வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு தமிழக அரசின் அதிரடி திட்டம்!



## சீன புதிய வரைபடத்தில் அருணாச்சல பிரதேசம்:

## உண்மை நிலையை மாற்ற முடியாது என இந்தியா கண்டனம்!















பாட்டாளி மக்கள் கட்சியின் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி மேட்டுக்குப்பம் 195வது வட்டம் சார்பாக, பகுதி செயலாளர் திரு.துரை.சந்துரு அவர்களின் முன்னிலையில், துரைப்பாக்கம் மற்றும் மேட்டுக்குப்பம் பகுதியில் வெள்ளத்தால் சூழப்பட்ட மக்களுக்கு நேரில் சென்று உணவு வழங்கப்பட்டது. வட்டச் செயலாளர் திரு.ந.மதிவானன் மற்றும் அனைத்து நிர்வாகிகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை செய்தனர்.

# பேனா குரல்

PENA KURAL

RNI No.: TNTAM/2022/85375 தமிழ் மாத இதழ்

மலர்: 02 இதழ்: 02 டிசம்பர் 2023 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-


## தலையங்கம்

### ஆசிரியர் குரல்

## முறையான ஏற்பாடுகள் இல்லாமைதான் காரணமா?

சபரிமலைக்குச் சென்றுவரும் பக்தர்கள் தெரிவிக்கும் தகவல்கள் அதிர்ச்சி அளிப்பவையாக இருக்கின்றன. முறையான முன்னேற்பாடுகள் செய்யப்படாமலும், பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லாமல் இருப்பதும், தரிசனத்துக்கு பல மணிநேரம் காத்திருக்கும் அவலமும் முன்னெப்போதும் இல்லாத அளவில் காணப்படுகின்றன. சபரிமலை செல்லும் பக்தர்கள் வேண்டுமென்றே சிரமத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்களோ என்கிற ஐயத்தை எழுப்பும் அளவுக்கு மோசமான சூழல் இருப்பதாகத் தெரிகிறது. கடுமையான விரதம் இருந்து முழுமையான அர்ப்பணிப்பு உணர்வுடன் 41 நாள் மண்டல காலத்தில் ஐயப்பனை தரிசனம் செய்ய சபரிமலை சந்நிதானத்தை அடையும் ஐயப்பன்மார்களின் நோக்கம் வேறொன்றுமல்ல... சில நிமிடங்கள் அல்ல, சில நொடிகளாவது ஸ்ரீ தர்மசாஸ்தாவின் புண்ணிய தரிசனம் கிடைத்தால் போதும் என்பதுதான் புனித யாத்திரையின் நோக்கமும், அவர்களது விருப்பமும். சொல்லப்போனால் அது பக்தர்களின் உரிமையும்கூட. இப்போது சபரிமலை தீர்த்தாடனத்தில் பக்தர்கள் எதிர்கொள்ளும் அவலம் ஒன்றிரண்டு அல்ல. சில நொடி திருப்தியான தரிசனம் கிடைப்பதில்லை என்பதுடன் நின்றுவிடவில்லை. சிலருக்கு தரிசனமே கிடைக்காத நிலையும் காணப்படுகிறது.

கட்டுப்பாடு ஏற்பாடுகள் முறையாக இல்லாததால் தரிசனம் கிடைக்காமல், சந்நிதானத்தை அடைவதற்கு முன்பே திரும்ப வேண்டிய துயரம் கடந்த ஒரு வாரமாக பல பக்தர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஐயப்ப தரிசனத்துக்காக வந்து குவிந்துகொண்டிருக்கும் பக்தர்களுக்கு பதில் சொல்ல வேண்டிய கடமை, முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தாத அரசு நிர்வாகத்துக்கும், திருவிதாங்கூர் தேவசம் போர்டுக்கும் உண்டு.

இதுவரை சந்தித்திராத அளவிலான இடர்ப்பாடுகளை நடப்பு மண்டல பூஜை காலத்தில் சபரிமலை செல்லும் பக்தர்கள் எதிர்கொள்கிறார்கள். பல மணிநேரம் தரிசனத்துக்காகக் காத்திருக்க வேண்டிய அவலம்; காட்டுப் பாதையில் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள்; உணவுக்கும் சிரமபரிகாரத்துக்கும் தேவையான ஏற்பாடுகள் இல்லாமல் இருப்பது - இவற்றையெல்லாம் ஒருசில நொடி ஐயப்ப திவ்ய தரிசனத்தில் பக்தர்கள் மறந்துவிடுவார்கள். அந்த திவ்ய தரிசனம் கிடைக்கவில்லை என்கிற நிலைமை ஏற்படும்போது, 41 நாள் விரதம் இருந்து சபரிமலை புனிதப் பயணம் மேற்கொள்ளும் பக்தர்களுக்கு ஏற்படும் வேதனையை வார்த்தைகளில் விவரிக்க முடியாது.

சபரிமலை சந்நிதானமும், சந்நிதானத்தை நோக்கிய பாதைகளும் கூட்ட நெரிசலில் சிக்கித் தவிக்கின்றன. காவல்துறை-யினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து தடம்புரளும் நிலையில், பக்தர்கள் பல மணிநேரம் வரிசையில் காத்திருக்கும் அவலம் ஏற்பட்டிருக்கிறது. தரிசன நேரத்தை ஒரு மணிநேரம் அதிகரித்தும்கூட, பெரிய அளவில் பலன் ஏற்படவில்லை. கடந்த சில நாள்களாக 18-ஆம் படி ஏறி, தரிசனம் செய்வதற்கு பக்தர்கள் 18 மணிநேரத்துக்கும் அதிகமாக காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. காத்திருப்பின்போது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் ஏராளம். முதியோரும் குழந்தைகள் உள்ளிட்ட பக்தர் கூட்டம் உணவும், குடிக்கத் தண்ணீரும் கிடைக்காமல் தவிக்கின்றன. குறித்த நேரத்தில் மருந்து உட்கொள்ள முடியாமல் அவதிப்படும் பக்தர்கள் பலர். தரிசனத்துக்காகப் பல மணிநேரம் வரிசையில் நிற்கும் குழந்தைகளும் முதியோர்களும் ஆங்காங்கே மயங்கி விழும் காட்சிகள் காணப்படுகின்றன. நாள்தோறும் நெஞ் சுவலியால் பாதிக்கப்பட்டு முதலுதவி சிகிச்சைக்காகத் தூக்கிச் செல்லப்படும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கூட்டத்தைக் கட்டுப்படுத்த முறையான ஏற்பாடுகளை உறுதிப் படுத்த வேண்டும் என்கிற உத்தரவை பலமுறை உயர்நீதிமன்றம் பிறப்பித்துவிட்டது. ஆனாலும்கூட, அரசு நிர்வாகத்தில் ஒருங்கிணைப்பு இல்லாத நிலைமை தொடர்கிறது. சபரிமலை தீர்த்தாடனம் தொடங்கும்போது, எத்தனை பக்தர்கள் வருவார்கள் என்கிற துல்லியமான கணக்கை இணையவழி அனுமதி சீட்டு (‘வெர்சுவல் க்யூ’) மூலம் உறுதிப்படுத்தி இருக்கிறோம் என்று காவல்துறையும், தேவசம் போர்டும் அரசுத் தரப்பும் தெரிவித்தன. ஆனால், 50,000 பேருக்காக உருவாக்கப்பட்ட கட்டமைப்பில், ஒரு லட்சம் பக்தர்கள் வரும்போது எப்படி எதிர்கொள்வது என்று ஏன் யோசிக்கவில்லை என்கிற கேள்வி எழுகிறது.


கூட்டத்தைக் கட்டுப்படுத்த காவல்துறையினரின் சேவையை மதித்துப் பாராட்டும் அதே வேளையில், அரசிடம் ஒரு கேள்வியை எழுப்பத் தோன்றுகிறது. நாள்தோறும் சராசரியாக 80,000 பக்தர்கள் தரிசனத்துக்கு வரும் சபரிமலையில், கூட்டத்தைக் கட்டுப்படுத்த 1,800 காவல்துறையினர் போதுமா? எட்டு மணிநேரப் பணியில் 600 பேர் மட்டுமே இருப்பார்கள். அவர்களில் முதல் முறையாக சபரிமலைப் பணிக்கு இணைக்கப்பட்டவர்கள் பலர். பக்தர்கள் கூட்டம் குவியும் என்று தெரிந்தும் அரசு போதுமான காவலர்களை பணியில் நிறுத்தாததற்கு என்ன காரணம் என்கிற கேள்வியை ஐயப்பன்மார்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த கேரள மாநிலமே கேட்கிறது.

அதிக நேரம் காத்திருக்காமல் 18-ஆம் படி ஏறி சுவாமி தரிசனம் செய்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாக தேவசம் போர்டும், அரசும் செய்தாக வேண்டும். இனிவரும் நாள்களில் பக்தர்களின் கூட்டம் மேலும் அதிகரிக்கப் போகிறது. அதை எதிர்கொள்ளும் அளவில் காவல்துறையினரை பணியமர்த்துவதும், சபரிமலையில் மட்டுமல்லாமல், சபரிமலையை நோக்கிச் செல்லும் பாதைகளில் எல்லாம் பக்தர்களின் அடிப்படை வசதிகளை உறுதிப்படுத்துவதும் கடமை கேரள மாநில அரசின் கடமை. (நன்றி, தினமணி)

– ராதிகா சிவசங்கர், ஆசிரியர்

# கூடுதல் மூலதன கடன் வழங்க கோரி

# மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு முதல்வர் கடிதம்



மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு கூடுதல் மூலதன கடன் வழங்க கோரிக்கை விடுத்து, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ள குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குக் கூடுதல் மூலதனக் கடன் மற்றும் கடன் திரும்ப செலுத்தும் காலத்தை நீட்டித்தல் உள்ளிட்ட முக்கிய உதவிகளை வழங்கிட வேண்டும் என மத்திய நிதி மற்றும் பெரு நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனை வலியுறுத்தியுள்ளார் தமிழக முதல்வர் ஸ்டாலின்.

மேலும், சுமார் 4800 சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. மூலப்பொருட்கள், உற்பத்தி பொருட்களும் சேதமடைந்துள்ளன. இந்நிறுவனங்களை உடனடியாக மீட்டெடுப்பது அவசியம் என்றும், முதல்வர் ஸ்டாலின் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, செங்கல்பட்டு, காஞ் சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையால் பாதிக்கப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கூடுதல் மூலதன கடனுதவி வழங்கிடவும், காப்பீட்டு தொகையை விரைந்து வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்றிய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு இன்று (9.12.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழில் நிறுவனங்களை கடுமையாக பாதித்து உற்பத்தியிழப்பை ஏற்படுத்தியுள்ளது. இம்மாவட்டங்களில் 24 தொழிற்பேட்டைகளில் உள்ள சுமார் 4800 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இடைவிடாத பெரு மழையினால் அதிகமான பாதிப்பிற்குள்ளானது மட்டுமல்லாமல் மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தியான பொருட்கள் சேதம் அடைந்து தொழில் நிறுவனங்கள் முழுமையாக செயல்பட இயலாத நிலையில் உள்ளது.

இந்த நிறுவனங்கள் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது, ஏற்றுமதி மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்நிறுவனங்களை உடனடியாக மீட்டெடுப்பது அவசியமென்பதினை முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மாநில அரசு மின் விநியோகம் மற்றும் சாலை போக்குவரத்தை உடனடியாக சீர் செய்துள்ளபோதும், இந்நிறுவனங்கள் மீண்டும் முழுமையாக உற்பத்தியை துவங்க சிறிது காலம் தேவைப்படும் என்பதால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் திருப்பி செலுத்தும் காலத்தை மாற்றியமைத்திடவும், கூடுதல் மிகைப்பற்று (Over Draft) வசதியினை வழங்கிடவும், கூடுதல் நடைமுறை மூலதன கடன் வழங்க வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை அறிவுறுத்தவும், காப்பீட்டு தொகையை காலதாமதமின்றி மதிப்பீடு செய்து உடனடியாக விடுவிக்க விரைந்து நடிவடிக்கை எடுக்க காப்பீட்டு நிறுவனங்களை அறிவுறுத்திடவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொருளாதார ரீதியாக மீண்டெழ உறுதுணையாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– பா.நவின்குமார்

# சீன புதிய வரைபடத்தில் அருணாச்சல பிரதேசம்:

## உண்மை நிலையை மாற்ற முடியாது என இந்தியா கண்டனம்




சீனா வெளியிட்டுள்ள புதிய வரை படத்தில் இந்தியாவின் அருணாச்சல பிரதேசம், அக்ஷய் சின் பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

சீனாவின் இயற்கை வளத்துறை அமைச்சகம் தேசிய வரைபட விழிப்புணர்வு வாரத்தை ஜெஜியாங் மாகாணத்தின் டெகிங் பகுதியில் கொண்டாடியது. இதை முன்னிட்டு இந்தாண்டுக்கான தேசிய வரைபடம் வெளியிடப்பட்டது. அதில் அருணாச்சல பிரதேசத்துக்கு தெற்கு திபெத் என பெயரிட்டும், கடந்த 1962-ம்ஆண்டு போரில் ஆக்கிரமித்த பகுதியை அக் ஷய் சின் என்றும் சீனா கூறியுள்ளது

இதேபோல் தைவான் மற்றும் சர்ச்சைக்குரிய தெற்கு சீன கடல் பகுதியையும், தனது பகுதியாக புதிய வரைபடத்தில் சீனா தெரிவித்துள்ளது. தெற்கு சீன கடலின் பெரும் பகுதியை தனது பகுதியாக சீனா உரிமை கொண்டாடியுள்ளது. இந்த தெற்கு சீன கடல் பகுதியில் வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புரூனே ஆகிய நாடுகளும் உரிமை கொண்டாடுகின்றன.

தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் நடந்த பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்கு இடையே சீன அதிபர் ஜின்பிங்கை சந்தித்து பிரமதர் மோடி பேசினார். அப்போது இந்தியா-சீனா எல்லை பகுதிகளில் தீர்க்கப்படாத பிரச்சினைகள் கவலையளிப்பதாக தெரிவித்தார். இந்தியா-சீனா உறவு இயல்பு நிலைக்கு திரும்ப எல்லையில் அமைதி நிலவுவது முக்கியம் என பிரதமர் மோடி அப்போது வலியுறுத்தியதாக இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் வினய் க்வத்ரா தெரிவித்தார்.

புதிய வரைபடம் குறித்து சீனஇயற்கை வளங்கள் துறைஅமைச்சகத்தின் திட்டமிடல் துறை தலைவர் வூ வென்சாங் கூறும்போது, "நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் வரைபடம் புவியியல் அமைப்பு தகவல்கள் முக்கிய பங்காற்று கின்றன. இயற்கை வளங்கள் மேலாண்மை, சூழலியல் மற்றும் நாகரீகங்களை உருவாக் கவும் இது உதவுகிறது" என்றார்.

சீன அதிபர் ஜி ஜின்பிங் தலைமையிலான அரசு, சர்வதேச விதிமுறைகளை மீறி, அடுத்த நாடுகளின் எல்லைகளை உரிமைகொண்டாடுவதில் மிக மோசமான வியூகங்களை பயன்படுத்துகிறது.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகையில், "இது சீனாவின் பழைய பழக்கம். நமது பகுதிகள் என்ன என்பதில் இந்த அரசு மிக தெளிவாக உள்ளது. அபத்தமாக உரிமை கோருவதன் மூலம், அடுத்த நாட்டின் பகுதிகள் சீனாவுடையது ஆகாது'' என்றார்.

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் அரிந்தம் பாக்சி கூறும்போது, "சீனா இதுபோல் கூறுவதுமுதல் முறையல்ல. இதுபோன்ற முயற்சிகளுக்கு, இந்தியா ஏற்கெனவே கண்டனம் தெரிவித்துள்ளது.

அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் பிரிக்க முடியாத பகுதி. புதிதாக பெயர் வைப்பதால், உண்மை நிலவரத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது'' என்றார்

**- நா வீ சிவசங்கர்**

# திருப்புகழ் கிடைத்த கதை
# திருப்புகழ் நெருப்பென்று அறிவோம்!

இன்று நாம் போற்றிப்புகழும் திருப்புகழ் நமக்கு கிடைக்க காரணமாக அமைந்த 24 நான்கு வருட உழைப்பை நாம் அறிவோமா? அதற்கு யார் காரணம் என்பதை வரலாறு அறியுமா?

அருணகிரிநாதர் கி.பி.15 ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் பிறந்து வாழ்ந்தவர். அவர் முருகக் கடவுள் மீது இயற்றிய ஒரு பக்தி நூல் திருப்புகழ் ஆகும். திருப்புகழில் 1307 இசைப்பாடல்கள் உள்ளன. அதாவது கிடைத்துள்ளன. இன்னமும் கிடைக்காதது பல நூறு ஆகும். இவற்றுள் 1088க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகள் உள்ளன என்று கணித்து இருக்கிறார்கள். திருப்புகழிலுள்ள இசைத்தாளங்கள் இசை நூல்களில் அடங்காத தனித்தன்மை பெற்றவை.

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன்... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ

கற்பகம் எனவினை.... என்றுதான் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தனது அனைத்து சொற்பொழிவுகளைத் தொடங்குவார். அவர் மூலமே அடியேனுக்கும் திருப்புகழ் அறிமுகம் ஆனது.

அத்தகைய திருப்புகழ் நமக்கு கிடைக்க தனிப்பட்ட ஒரு அரசு அலுவலரின் தன்னலமற்றது தொண்டினாலும், ஆர்வத்தாலுமே காரணமாக அமைந்தது. அந்த போற்றுதலுக்குரிய அறிஞர் வ.த.சுப்பிரமணிய பிள்ளை ஆவார். திருப்புகழ் நமக்கு கிடைக்கவும் சுவையான ஒரு காரணமும் உள்ளது. அவர் குறித்து ஒரு கட்டுரையை தமிழ் இந்து 9/8/14 அன்று வெளியிட்டிருந்தது. அதை இப்போது சித்தர்களின் குரல் வாயிலாக பார்ப்போம்.

பிரிட்டிஷ்காரர்கள் என்ற மாபாவிகள் இந்தியாவை ஆண்டபோது இந்தியர்களுக்கு அரிதாகவே அரசுப் பணி தருவார்கள். ஒருவர் மாவட்ட ஆட்சியர் ஆகும் தகுதி இருந்தால், அவர் இந்தியராக இருந்தால், அவருக்கு எழுத்தர் வேலை கொடுப்பார்கள். வ.த.சுப்பிரமணிய பிள்ளை 1871-ம் ஆண்டு மஞ்சக்குப்பம் வழக்காடு மன்றத்தில் மாவட்ட முன்சீப்பாகப் பணிபுரிந்த காலம் அது. சிதம்பரம் நடராஜர் கோயில் சம்பந்தமான வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்த வழக்கில் சாட்சிக் கூண்டில் நின்ற தீட்சிதர்கள் தங்களுடைய வாதத்தில் கோவில் உரிமை தீட்சிதர் களாகிய எங்களுக்கே



என்று பொருள் தரக் கூடிய திருப்புகழ் பாடலை மேற்கோள் காட்டி வாதாடினர்.

அப்பாடலின் வரி;

வேத நூன் முறை வழுவாமே தினம் வேள்வியால் எழில் புனை
மூவாயிர(ம்) மேன்மை வேதியர் மிகவே பூசனை புரிகோவே...

பொருள்:

வேத நூலில் கூறப்பட்ட முறைப்படியே, தவறாமல் நாள் தோறும் யாகங்கள் செய்யும் அழகைக் கொண்ட சிறப்பான தில்லை மூவாயிரம் வேதியர்கள் மிக நன்றாகப் பூஜை செய்யும் தலைவனே...

வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் அந்தப் பாடலை கேட்ட மாத்திரத்தில் சொக்கிப் போனார். என்ன பாடல்




▲ நூலகக் காட்சிக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகள்.

அது எனக் கேட்டார். அருணகிரிநாதர் எழுதிய திருப்புகழ் பாடல்கள் 16000 இல் ஒன்று என்று சொன்னார்கள். எங்கே அந்நூலைக் காட்டுங்கள் என்றார். ஓலைச்சுவடி ஒன்றை நீட்டினார்கள். மீதம் பாடல்கள் எங்கே.. என்று பதறினார்... எங்களிடம் இல்லை என்று கை விரித்தார்கள்.

தீட்சிதர்கள் கூறிய வாசகத்தைக் கேட்டவுடன் வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு அக்கணமே பொறி தட்டியது. அருணகிரி நாதர் பாடிய பதினாறாயிரம் பாடல்களில் ஒரு ஆயிரம் பாடல்களையாவது சேகரித்து அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டார்.

தலங்கள் தோறும் சென்று செல்லேறிப் போன பல வழுக்கள் பொதிந்திருந்த திருப்புகழ் ஓலைச்சுவடிகள் பலவற்றைச் சேகரித்து ஒத்துப்பார்த்து, பாட பேதங்களைக் கண்ணுற்று வெவ்வேறு சுவடிகளில் காணும் வித்தியாசங்களைப் பண்டிதர்களைக் கொண்டு திருத்தி அச்சிட்டுப் புத்தக வடிவில் யாவரும் எளிதில் பெறுமாறு செய்த ஏந்தல் வ.த.சுப்பிரமணிய பிள்ளை.

அரசாங்கப் பணிகளுக் கிடையில் தமக்குத் தெரிந்த பல நண்பர்களிடம் தொடர்பு கொண்டுத் திருப்புகழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடத் தொடங்கினார். ஆங்காங்கு அவை கிடைக்கத் தொடங்கின.....

(1) 1876-ம் ஆண்டு ஆறுமுக நாவலர் எழுதிய சைவ வினா-விடையில் திருப்புகழின் ஆறு பாடல்கள் இருந்தன.

(2) 1878-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி அன்று காஞ்சிபுரம் புத்தேரி தெரு அண்ணாமலை பிள்ளை என்பவரிடமிருந்து 750 பாடல்கள் கொண்ட ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன.

(3) அதே வருடம் பின்னத்தூர் சீனிவாச பிள்ளையிடம் 450 பாடல்களும், பின்னர் அவரிடமே 150 பாடல்களும் கிடைத்தன.

(4) 20.03.1881-ல் கருங்குழி ஆறுமுக ஐயர் என்ற வீர சைவரிடமிருந்து 900 பாடல்கள் திருப்புகழ்ச் சுவடிகள் கிடைத்தன.

(5) 1903-ம் ஆண்டு திருமாகறல் என்ற ஊரில் 780 பாடல்கள் கிடைத்தன.

உ.வே.சாமிநாதையர் தமிழகமெங்கும் தமிழ் இலக்கிய ஏட்டுச் சுவடிகளைத் தேடிக்கொண்டிருந்த காலம் அது. வ.த.சுப்பிரமணிய பிள்ளையவர்கள், உ.வே.சாவிடம் தொடர்பு கொண்டு திருப்புகழ் சுவடிகளைக் கண்டால் தெரிவிக்குமாறு வேண்டிக் கொண்டார். இதை உ.வே.சா, தனது "என் சரித்திரம்" நூலில் பதிவுசெய்துள்ளார்.

அருணகிரிநாதர் இயற்றி அருளியுள்ள திருப்புகழ் பாடல்களின் எண்ணிக்கை 16000 என வரகவி மார்க்க சகாய தேவர் தனது பாடலில்,

"எம் அருணகிரி நாதர் ஓது பதினாயிரத் திருப்புகழமுழ் அமுதுமே" என்ற வாக்கால் கூறியுள்ளார்.

ஆனால் வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் விடா முயற்சியால் 1324 பாடல்கள் மட்டுமே சேகரிக்க முடிந்தது.

ஓலைச்சுவடிகளின் குறை களைக் களைந்து சீர் செய்வ தற்கு மஞ்சக்குப்பம் பள்ளி ஆசிரியர் சிவசிதம்பர முதலியார், சேலம் சரவணப்பிள்ளை, ஆனந்த ராம ஐயர் போன்றவர்கள் ஆற்றிய பங்கு பெரிது.

திருப்புகழ் முதல் பதிப்பை 05.06.1891 அன்று சிவசிதம்பர முதலியார் செப்பம் செய்து சீர்திருத்தி வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் ஒப்படைத்து விட்டார். 9.04.1895-ம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட திருப்புகழ் பாடல்களை அச்சிற்குப் பதிப்பிக்கக் கொடுத்தார்.

திருப்புகழ் கட்டம் செய்யப்பட்டு அழகிய வடிவில் அச்சில் பதிப்பித்து முதன்முதலாக புத்தக வடிவில் பிள்ளையவர்கள் அப்போதுபணிசெய்துகொண்டிருந்ததிருத்துறைப்பூண்டிக்கு அனுப்பப்பட்டது. புத்தக வடிவில் திருப்புகழைக் கண்ட பிள்ளையவர்கள் பேரானந்தம் அடைந்தார். அதே சமயம் ஓலைச்சுவடியிலிருந்து பெயர்த்து எழுதிச் செப்பம் செய்து தந்த சிவ சிதம்பர முதலியார் அச்சு வடிவத் திருப்புகழ் புத்தகத்தைக் காணாமலேயே இறந்துபோய் விட்டார்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் திருப்புகழைப் புத்தக வடிவில் கண்ட அன்று தனது டைரிக்குறிப்பில் 09.04.1895-ம் ஆண்டு இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். கடந்த 24 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட திருப்புகழ் பதிப்பு வேலை முடிய இவ்வளவு காலம் சென்றுள்ளது. இப்போதும் பாதி அளவே முடிந்துள்ளது என்று கவலையுடன் தமது டைரியில் குறிப்பிட்டுள்ளார்.

1909-ம் ஆண்டு சில திருத்தங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. அதே ஆண்டு ஏப்ரல்-16-ம் தேதி இரவில் படுக்கைக்குச் சென்றவர் நள்ளிரவில் உயிர்துறந்துவிட்டார். வ.த.சுப்பிரமணிய பிள்ளையின் புதல்வர்கள் வ.சு.செங்கல்வராய பிள்ளை மற்றும் வ.சு.சண்முகம் பிள்ளையும்புதிய பாடல்களை இணைத்து திருப்புகழினைத் தொடர்ந்து வெளியிடலாயினர்.

வ.த.சுப்பிரமணிய பிள்ளையின் விருப்பப்படி அவருடைய சமாதி, திருத்தணி கோவிலை நோக்கியபடி அமைக்கப்பட்டுள்ளது.

நாம் இன்று முருகனை நினைந்து உருகிப் பாடும் திருப்புகழ் ஒரு தனி நபர் விடா முயற்சியால் தான் என நாம் நினைக்கும்போது அய்யா வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் பெருந்தொண்டு எத்தகையது என நன்றியுடன் வணங்குவோம்.

சந்த முனி யின் 1324 திருப்புகழ் பாடல்களில் மொத்தமாக 857 சந்தங்களும் அவற்றிலிருந்து 178 தாள அமைப்புகளும் கிடைத்துள்ளன. என ஓர் ஆய்வுக் குறிப்பு சொல்கிறது.

நமக்குக் கிடைத்துள்ள 1324 பாடல்களில் 857 சந்த பேதம்; 16000 பாடல்களும் கிடைத்திருந்தால்..!

உதாரணமாக ஒரு மிக எளிய பாடல் பழனி திருப்புகழில் இருந்து பார்ப்போம்.

சந்தம்:

தனதான தந்தனத் ...... தனதான
தனதான தந்தனத் ...... தனதான

பாடல் :

அபகார நிந்தைபட் ...... டுழலாதே
அறியாத வஞ்சரைக் ...... குறியாதே
உபதேச மந்திரப் ...... பொருளாலே
உனைநானி னைந்தருட் ...... பெறுவேனோ
இபமாமு கன்தனக் ...... கிளையோனே
இமவான்ம டந்தையுத் ...... தமிபாலா
ஜெபமாலை தந்தசற் ...... குருநாதா
திருவாவி னன்குடிப் ...... பெருமாளே.

இப்பாடலில் அருணகிரிநாதர் சாமிகள் முருகனின் அருள் பெறுவதற்கான எளிய வழிகள் சொல்கிறார்.

பிறக்குச் செய்த தீமைகளினால் நிந்தனைக்கு ஆளாகி அதனால் வினைகளை ஈட்டி விடாமல், அவ்வாறு தீய குணங்கள் கொண்ட மனிதர்களுடன் பழகாமலும், உரிய கிரியைகளுடன் கூடிய பூசையை தினம் செய்தால் முருகனின் அருள் பெறலாம் என்கிறார். ஒவ்வொரு சைவரும் ஜெபமாலை வைத்து இருக்க வேண்டும்.


திருமுருகன் ஆறுபடைகளில் மூன்றாவது படைவீடு திருஆவினன்குடி என நக்கீரதேவ நாயனார் அவர்களால் திருமுருகாற்றுப்படை நூலில் பாடப்பட்டு இருக்கிறது. இத்திருக்கோயிலில் மயிலில் ஆரோகணித்து திருமுருகன் வீற்றிருப்பார். பழனி மலைமேல் இருக்கும் தண்டபாணி கோயில் படை வீடு அல்ல என்பர் பெரியோர்.

திருத்தணி திருப்புகழில் அருணகிரிநாதர் சுவாமிகள் திருப்புகழ் சிறப்பு சொல்கிறார்.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் ...... சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் ...... றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் ...... பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் ...... செயல்தாராய்.

அய்யா வ.த.சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் விடா முயற்சியால் 1324 பாடல்கள் நம் கையில் உள்ளது. நெருப்பையும் எரிக்கும் நெருப்பான திருப்புகழில் இருந்து எளிய பாடல் ஒன்றாவது தினம் ஒன்று விடாமல் சொல்வோம்... முருகனின் திருவருள் பெறுவோம்.

**- தமிழ் வீரன்**




# பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்துக்கு விண்ணப்பிப்பது எப்படி?

நாடு முழுவதும் இதர பிற்படுத்தப் பட்டோர், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், சீர்மரபினர், ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 30 ஆயிரம் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் வகையில் பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டம் மத்திய அரசால் செயல்படுத்தப்பட உள்ளது. 2023-24-ம் ஆண்டுக்கு https://scholarships.gov.in/public/FAQ/topclass school list 2211 compressed.pdf என்ற இணைய முகவரியில் வெளியிடப்பட்டுள்ள பள்ளிகளில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த 3,093 மாணவர்களுக்கு இக்கல்வி உதவித்தொகை வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கான பெற் றோரது உச்சகட்ட வருமான வரம்பு ரூ.2.5 லட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க கடைசி நாள்: 31.12.2023. கல்வி நிறுவனங்கள் விண்ணப்பத்தை சரிபார்க்க கடைசி நாள்:15.01.2024. இத்திட்டத்தின்கீழ் கடந்த நிதியாண்டில் பயனடைந்த மாணவ, மாணவிகள் தேசிய கல்வி உதவித்தொகைத் தளத்தில் (National Scholarship Portal) Renewal Application என்ற இணைப்பில் சென்று கடந்த ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட விண்ணப்ப எண் மற்றும் கடவுச்சொல் பதிவுசெய்து 2023-24ம் ஆண்டுக்கான விண்ணப்பித்தை புதுப்பித்துக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் 9 மற்றும் 11ம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகள் 8 மற்றும் 10ம் வகுப்புகளில் பெற்ற மதிப்பெண்களின் அடிப் படையிலேயே பயனாளிகளாக தேர்வு செய்யப்பட்டு இக்கல்வி உதவித் தொகையானது வழங்கப் படும். எனவே, 60 சதவீதம் மற்றும் அதற்கும் அதிகமாக 8 மற்றும் 10ம் வகுப்புகளில் மதிப்பெண் பெற்ற பட்டியலிடப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் தேசிய கல்வி உதவித்தொகைத் தளத்தில் சென்று தங்களது விவரங்களை பதிவு செய்ய வேண்டும்.

பெறப்படும் விண்ணப்ப எண் மற்றும் கடவுச்சொல் பதிவுகளை Fresh Application என்ற இணைப்பின்கீழ் பதிவுசெய்து உரிய ஆவணங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும். இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு https://scholarships.gov.in மற்றும் மற்றும் மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணையதளத்தை (https://socialjustice.gov.in) அணுகி கல்வி உதவித்தொகை பயன்களைப் பெறுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் தெரி-வித்துள்ளார்.

**- பி.ஸ்டாலின்**



# மிக்ஜாம் புயல் பாதிப்பு: மக்களின் நிலை என்ன?

2015 சென்னை பெருவெள்ளத்திற்கு பின்னர் இப்படி ஒரு மழையை வட தமிழகம் காணவில்லை. விடாமல் மழை கொட்டி தீர்த்திருக்கிறது. அதிலும் டிசம்பர் 4ஆம் தேதி சென்னையின் பல்வேறு இடங்களில் 20 சென்டிமீட்டருக்கு மேல் மழை பெய்துள்ளது. இவை அனைத்திற்கும் ஆதாரப் புள்ளி மிக்ஜாம் புயல்.

மிக்ஜாம் புயல் வடக்கு நோக்கி நகர்ந்து ஆந்திர கடலோரப் பகுதிகளை நோக்கி சென்றது. அதாவது, ஆந்திராவின் நெல்லூர் அருகே மிக்ஜாம் புயல் கரையை கடந்தது.

இதையொட்டி பொதுமக்கள் யாரும் வெளியே வர வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதிவேகமாக காற்று வீசும் என்பதால் புயல் முழுவதுமாக கடந்த பின்னரே பொதுமக்கள் வெளியே வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.


புயல் காரணமாக ஆந்திரா – கொல்கத்தா தேசிய நெடுஞ் சாலையில் வாகனப் போக்குவரத்து கண்காணிக்கப்பட்டு, நெல்லூர், சித்தூர் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் பாதிப்புகள் குறித்து ஆராயும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. நெல்லூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் அரசு பேருந்துகள் இயக்கப்படவில்லை. மிக்ஜாம் புயல் பாதிப்பால் வட தமிழகத்தில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

**அதிகபட்ச மழைப்பொழிவு**

கடந்த ஒன்றாம் தேதி முதல் 4ஆம் தேதி வரை பெய்த அதிகபட்ச நிலவரம் குறித்து வானிலை ஆய்வு மையம் வெளி–யிட்ட தகவலில், நுங்கம்பாக்கத்தில் 58 செ.மீ (வழக்கமான மழைப்பொழிவு 5 செ.மீ), மீனம்பாக்கத்தில் 50 செ.மீ (வழக்கமான மழைப்பொழிவு 5 செ.மீ) எனப் பதிவாகியுள்ளது.

இதுதான் பெரும் வெள்ளத்திற்கு காரணம். வெள்ளத்தில் ஏராளமான பொருட்கள் அடித்து செல்லப்பட்டிருக்கின்றன. சுமார் 4 லட்சம் வாகனங்கள் சேதமடைந்திருப்பதாக தெரிய வந்திருக்கிறது.





மிக்ஜாம் புயல் நிவாரணத் தொகை வழங்கல் டோக்கன்

டோக்கன் எண்.

கடையின் பெயர் :
குடும்ப அட்டைதாரர் பெயர் :
கு. அட்டை எண் :

மிக்ஜாம் புயல் நிவாரணத் தொகை வழங்கப்படும்

நாள் :
நேரம் :

அலுவலர்

இதில் பெரும்பாலும் பைக்குகளும், ஆட்டோக்களும்தான் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் சாமானிய மக்களின் வாழ்வில் கூடுதல் பொருளாதார சுமை ஏறி–யிருக்கிறது. இந்நிலையில் பாதிப்புகளை எதிர்கொண்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணம் ரூ.6000 அறிவிக்கப்பட்டிருக்கிறது.


மிக்ஜாம் புயல் மழையால் சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்நிலையில், சென்னை முகவரியில் ரேஷன் அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரூ.6000 நிவாரண நிதி வழங்கப்பட்டது. ஆனால், சென்னையில் நீண்ட காலமாக தங்கியிருக்கும் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்காக 5.5 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டிருந்த அறிக்கையில், “மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 6 ஆயிரம் வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த நிவாரணத் தொகையினை, பாதிக்கப்பட்டவர்கள் குடியிருக்கும் பகுதிகளில்உள்ளநியாயவிலைக்கடைகளின்மூலம்ரொக்கமாக வழங்கப்படும். அதுமட்டுமின்றி, புயல், வெள்ளத்தினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு, இழப்பீட்டுத் தொகையை ரூபாய் 4 இலட்சத்திலிருந்து, 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கிடவும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

சேதமடைந்த குடிசைகளுக்காக ஏற்கெனவே வழங்கப்படும் தொகை ரூபாய் 5 ஆயிரத்தினை, ரூபாய் 8 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்“ என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிவாரண நிதியானது ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும் என்றும் அரசு தெரிவித்திருந்தது. ஆனால், சென்னையில் வசிப்பவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள். அவர்களுக்கான ரேஷன் அட்டை, அவர்களுடைய சொந்த மாவட்டத்தின் முகவரி–யில்தான் இருக்கும். ஆனால் சென்னையில் நீண்ட காலமாக வசிப்பதால் இவர்களும் பாதிக்கப்பட்டிருப்பார்கள். எனவே இவர்களுக்கு நிவாரணம் எப்படி வழங்கப்படும்? என்று கேள்வி எழுந்தது.

இந்த கேள்விக்கும் தமிழக அரசு சார்பில் விளக்கமளிக்கப்பட்டது. அதாவது, வெளி மாவட்டங்களை சேர்ந்தோருக்கு ரேசன் கடைகளில் விண்ணப்பம் வழங்கப்படும். அதை பூர்த்தி செய்து கொடுத்தால், உரிய ஆய்வுக்கு பின்னர் நிவாரணம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

தற்போது இந்த படிவங்கள் வழங்கி முடிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவை பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளன. அதன்படி, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் ரூ.6000 நிவாரணம் கேட்டு



ரேசன் கார்டு இல்லாதோர் 5.5 லட்சம் பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழகத்துக்கு ரூ.450 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. அதேபோல் ஆந்திரப் பிரதேசத்துக்கு ரூ.493 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர், “மிக்ஜாம் புயல் தமிழகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தை மிகக் கடுமையாக பாதித்துள்ளது. இந்த இரு மாநிலங்களிலும் சேதத்தின் அளவு வேறுபட்டாலும், மாநிலங்களின் பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பயிர்கள் மூழ்கியுள்ளன. புயலின் பாதிப்புகளை நிர்வகிப்பதற்கு மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து மத்திய அரசின் இரண்டாவது தவணை பங்களிப்பை முன்கூட்டியே விடுவிக்கும்படி உள்துறை அமைச்சகத்துக்கு பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். அதன்படி, இரண்டாவது தவணைத் தொகையாக ஆந்திராவுக்கு ரூ.493 கோடியும், தமிழகத்துக்கு ரூ.450 கோடியும் விடுவிக்கப்படுகிறது.

மத்திய அரசு இரு மாநிலங்களுக்கான இதே அளவிலான முதல் தவணைத் தொகையை ஏற்கெனவே விடுவித்துள்ளது. புயலால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக நான் இறைவனை வேண்டுகிறேன். இந்த இக்கட்டான காலக்கட்டத்தில் நாங்கள் அவர்களுடன் உறுதுணையாக நிற்போம். விரைவில் இயல்பு நிலை திரும்பும் என்று உறுதியளிக்கிறோம்“ என்று மத்திய அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

**ரூ.5,060 கோடி இடைக்கால நிவாரணம் - முதல்வர் கடிதம்:** முன்னதாக தமிழகத்தில் ‘மிக்ஜாம்’ புயல் வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்திட இடைக்கால நிவாரணமாக ரூ. 5,060 கோடி வழங்கிடக் கோரி பிரதமர் நரேந்திரமோடிக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் புதன்கிழமை கடிதம்




எழுதியிருந்தார். அக்கடிதத்தில், ''சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய நான்கு மாவட்டங்களில் மிக அதிகமான மழை பொழிந்தது. இதன் காரணமாக, இந்த நான்கு மாவட்டங்களில் மிகக்கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சாலைகள், பாலங்கள், பொது கட்டடங்கள் என பல்வேறு உட்கட்டமைப்புகள் சேதம் அடைந்துள்ளன. மேலும், லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது'' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

**ராஜ்நாத் சிங் ஆய்வு:** இதனிடையே, மிக்ஜாம் புயலால் ஏற்பட்டுள்ள மழை வெள்ள பாதிப்புகளை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஹெலிகாப்டர் மூலம் வியாழக்கிழமை பார்வையிட்டார்.

**சென்னை வெள்ள மேலாண்மை திட்டத்துக்கு ரூ.561.29 கோடி:** அதேபோல், சென்னை வெள்ள மேலாண்மை திட்டத்துக்காக ரூ.561.29 கோடி மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். இதுகுறித்து வெளியிட்டுள்ள பதிவில், “கடந்த எட்டு ஆண்டுகளில் மூன்றாவது மிகப் பெரிய வெள்ள பாதிப்பைச் சென்னை சந்திக்கிறது. அதிகமான மழைப்பொழிவுகளால் பெருநகரங்களில் திடீர் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதை நாம் பார்த்து வருகிறோம்.

செயல்பாடுகளின் அணுகுமுறை வழிகாட்டுதலின் படி, தேசிய பேரிடர் தணிப்பு நிதியின் கீழ், முதல் நகர்ப்புற வெள்ளத்தணிப்பு திட்டத்துக்காக ரூ.561.29 கோடியை, சென்னை பேசின் திட்டத்துக்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற மேலாண்மை நடவடிக்கைக்காக ஒதுக்க பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். இது மத்திய அரசின் உதவியான ரூ.500 கோடியை உள்ளடக்கியது. இந்த வெள்ளத் தணிப்பு திட்டம் சென்னையை வெள்ளத்தைத் தாங்கக்கூடியதாக மாற்ற உதவும். நகர்ப்புற வெள்ள தணிப்பு மேலாண்மை திட்டத்தில் இது முதலாவது முயற்சியாகும். மேலும் இது பரந்த அளவில் நகர்ப்புற வெள்ள மேலாண்மையை மேம்படுத்த உதவும்“ என்று தெரிவித்துள்ளார்.

**- துரை. சந்துரு**

# தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தை மத்திய அரசு அமல்படுத்தி வருகிறது



2023-ம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக அதை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்காக சர்வதேச சிறுதானிய ஆண்டை அரசு கொண்டாடி வருகிறது. சிறுதானியங்களை ஊக்குவிக்க மத்திய, மற்றும் மாநில அரசுகள் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு 2023-ன் செயல் திட்டமானது உற்பத்தி, நுகர்வு, ஏற்றுமதி, விநியோக அமைப்புகளை வலுப்படுத்துதல், சுகாதார நன்மைகளுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டமிடலில் கவனம் செலுத்துகிறது.

ஊட்டச்சத்து தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், அவற்றின் மேம்பட்ட தேவையை பூர்த்தி செய்யவும், மத்திய அரசு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் - ஊட்டச்சத்து தானியங்கள் (என்.எஃப்.எஸ்.எம்-நியூட்ரி தானியங்கள்) செயல்படுத்தி வருகிறது. என்.எஃப்.எஸ்.எம்-நியூட்ரி தானியங்களின் கீழ் மேம்படுத்தப்பட்ட நடைமுறைகள், விதை விநியோகம் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள், உயிர் உரங்கள், அதிக மகசூல் தரும் இரகங்களின் சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி, பயிர் பாதுகாப்பு இரசாயனங்கள், களைக்கொல்லிகள், தெளிப்பான், திறமையான நீர் பயன்பாட்டு கருவிகள், பயிர் முறை அடிப்படையிலான பயிற்சி ஆகியவை அடங்கும். சிறுதானியங்களுக்கான விதை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், உத்தரகண்ட், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, அசாம், சத்தீஸ்கர், ஒடிசா, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் மற்றும் பீகார் போன்ற மாநிலங்கள் சிறுதானியங்களை ஊக்குவிக்க சிறுதானிய இயக்கங்களைத் தொடங்கியுள்ளன.

இத்தகவலை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் திரு அர்ஜுன் முண்டா மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

**- A.தங்கராஜ்**



# குற்றங்கள் தொடர்பான ஆய்வில் சென்னை நகருக்கான ரேங்க் என்ன தெரியுமா?

உலக அளவில் குற்ற சம்பவங்கள் அதிகம் நடக்கும் நகரங்கள் குறித்து அமெரிக்க இணைய நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் சென்னை மாநகராட்சி 208வது இடத்தில் உள்ளது.உலக அளவில் உள்ள முன்னணி நகரங்களின் குற்ற சம்பவங்கள் குறித்து அமெரிக்க இணைய நிறுவனம் ஒன்று ஆய்வு செய்து அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளது.

இதில் உலகிலேயே அதிக குற்றங்கள் நடக்கும் குற்ற தலைநகரம் என்ற இடத்தை வெனிசுலா நாட்டின் தலைநகரம் கேரகஸ் பிடித்துள்ளது.

**சென்னை நகருக்கான ரேங்க் என்ன தெரியுமா?**

Chennai safest city: உலக அளவில் குற்ற சம்பவங்கள் அதிகம் நடக்கும் நகரங்கள் குறித்து அமெரிக்க இணைய நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் சென்னை மாநகராட்சி 208வது இடத்தில் உள்ளது.

குற்ற நகரங்கள் பட்டியலில் முதல் 100 இடங்களில் இரண்டு இந்திய நகரங்கள் இடம் பிடித்துள்ளது. இதில் டெல்லி 72வது இடத்திலும், உத்திரபிரதேசம் மாநிலத்தின் நொய்டா நகரம் 93வது இடத்தில் உள்ளது. மேலும் இந்த பட்டியலில் ஹரியானா மாநிலம் குர்கான் 103வது இடத்திலும், கர்நாடகா மாநிலத்தின் பெங்களூரு 110வது இடத்திலும், கொல்கத்தா 161வது இடத்திலும், மகாராஷ்டிரா மாநிலத்தின் மும்பை 174வது இடத்திலும், தெலுங்கானா மாநிலத்தின் ஹைதராபாத் 185வது இடத்திலும், சண்டிகர் 187வது இடத்திலும், புனே 194வது இடத்திலும் அகமதாபாத் 253 வது இடத்திலும், மங்களூர் 296 வது இடத்திலும் உள்ளன

மேலும் இந்த பட்டியலில் தமிழ்நாட்டின் சென்னை 208வது இடத்தில் உள்ளது. மேலும் இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட சென்னை மாநகரத்தில் குறைவாகவே குற்ற சம்பவங்கள் நடைபெறுவதாக ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் அமெரிக்கா நாட்டின் சிக்காகோ, சான் பிரான்சிஸ்கோ, வாஷிங்டன், மலேசியா நாட்டின் கோலாலம்பூர், இத்தாலி நாட்டின் நெபிள்ஸ் போன்ற பகுதிகளை விட சென்னையில் குற்றங்கள் குறைவாக இருப்பதாக ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது. சென்னையை பொறுத்த வரை வழிப்பறி, கொலை, கொள்ளை போன்ற பிரச்சனைகளை விட லஞ்சமும், ஊழலும் தான் அதிக

பிரச்சனையாக இருப்பதாக ஆய்வில் கூறப்படுகிறது. மேலும் இந்தியாவில் குற்றங்கள் மிகவும் குறைவாக நடக்கும் மற்றும் மக்கள் பாதுகாப்பாக வாழும் நகரங்கள் பட்டியலில் முதலிடத்தில் கர்நாடகா மாநிலத்தின் மங்களூர் உள்ளது. அடுத்தடுத்த இடங்களில் குஜராத் மாநிலத்தின் வதோதரா, சூரத், அகமதாபாத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய நகரங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த ஆய்வு அறிக்கையில் உலகிலேயே குற்றங்கள் மிக மிக குறைவான குற்றங்கள் நடக்கும் பகுதியாக ஐக்கிய அரபு அமீரகத்தின் ரஸ் அல் கைமா நகரம் இடம் பிடித்திருப்பதாக ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

- ந.மதிவாணன்

# தமிழ்நாட்டிற்கென தனி வானிலை ஆய்வு மையம் சாத்தியமா?

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கணிப்பில் துல்லியம் குறைவா? உண்மையில் புதிய மாடலுக்கான தேவை உள்ளதா?

இந்தியாவை பொறுத்தவரை நாடு முழுவதும் வானிலை முன்கணிப்புகள் மற்றும் எச்சரிக்கைகளை மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும், இந்திய வானிலை ஆய்வு மையம்தான் அதிகாரப்பூர்வமாக வெளியிடுகிறது.

சென்னை, மும்பை, புது டெல்லி, கொல்கத்தா, நாக்பூர், குவஹாத்தி ஆகிய ஆறு மண்டல வானிலை ஆய்வு மையங்கள் வாயிலாக முன் அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

இந்திய வானிலை ஆய்வு மையம், அமெரிக்கா உருவாக்கிய உலகளாவிய முன்னறிவிப்பு அமைப்பு (Global Forecast System, GFS) என்ற மாடலை பின்பற்றி வானிலை அறிக்கை வெளியிட்டு வருகிறது.

இப்படியான நிலையில், கடந்த ஒரு வாரமாக சென்னையை வெள்ளக் காடாக்கிய மிக்ஜாம் புயலின் தாக்கம் குறித்தும், சென்னை வானிலை ஆய்வு மையம் தனது கணிப்பை அறிக்கையாக வெளியிட்டது.

ஆனால், ஆய்வு மையம் கணித்ததைவிட, மிக்ஜாம் புயலின் வேகம், நிலைகொண்ட நேரம் மற்றும் மழை அளவில் பெரும் மாறுபாடு இருப்பதாகத் தெரிவிக்கின்றனர் வல்லுநர்கள். 2015 புயலில் சென்னை கடும் பாதிப்பைச் சந்தித்தபோதும் இதே வாதம் முன்வைக்கப்பட்டன.

சென்னை மற்றும் தமிழகத்துக்கான, வானிலை ஆய்வு மையத்தின் கணிப்புகளில் துல்லியம் குறைவாக உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர் வானிலை சார்ந்து இயங்கும் வல்லுநர்கள்.

கணிப்பின் துல்லியத்தன்மையை அதிகரிக்க தமிழகத்துக்கு தனி மாடல் உருவாக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**மிக்ஜாம் புயல் கணிப்பில் என்ன குறைபாடு?**

சென்னை பொன்னேரி எல்.என் அரசுக் கல்லூரி இயற்பியல் துறையின் தலைவரும் இணைப் பேராசிரியருமான சாமுவேல் செல்வராஜ், “இந்தியா வெப்ப மண்டல (tropical region) நாடாக உள்ளதால் உலகளாவிய முன்னறிவிப்பு அமைப்பு மாதிரியைப் பயன்படுத்தி எடுக்கப்படும் வானிலை கணிப்புகளில் துல்லியத்தன்மை வெகுவாகக் குறைகிறது,”



என்று கூறினார்.

மேலும், மற்ற நாடுகளைப் போல் அல்லாமல் இங்கு கணிப்புகளை உருவாக்குவதே சவாலான ஒன்றாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

“சென்னையைத் தாக்கிய மிக்ஜாம் புயல் மோசமானதற்கு, எல் நினோ, இந்தியப் பெருங்கடலில் நிகழும் இருதுருவ செயல்முறை (Indian Ocean Dipole), மேடன்-ஜூலியன் அலைவு (Madden-Julian Oscillation) மற்றும் பருவநிலை ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றம்தான் காரணம்.


ஆனால், இதுபோன்ற மாற்றங்கள், புயலின் பாதை மற்றும் வேகத்தில் ஏற்படும் திடீர் மாற்றம் போன்றவை குறித்து, இந்திய வானிலை ஆய்வு மையம் முறையான மற்றும் முழுமையான படிப்புகளை மேற்கொள்வது இல்லை,” என்றும் சாமுவேல் செல்வராஜ் கூறினார்.

சொல்லப்போனால், “இந்திய வானிலை ஆய்வு மையம் தென்மேற்குப் பருவமழை தொடர்பான தகவல்கள் உள்ளதே தவிர, வடகிழக்கு தொடர்பான ஆராய்ச்சிகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்படுவதே இல்லை,” என்கிறார் அவர்.

தமிழ்நாட்டிற்கென தனி வானிலை ஆய்வு மையம் சாத்தியமா?

தமிழகத்துக்கான தனி வானிலை மாடல் ஒன்றை உருவாக்குவதும், அதை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதும் சாத்தியம் என்கிறார் இணைப் பேராசிரியர் சாமுவேல் செல்வராஜ்.

“உலகளாவிய முன்னறிவிப்பு அமைப்பின் (GFS) தரவுகளைப் பயன்படுத்தி டவுன்ஸ்கேலிங் என்ற முறையில்




நமக்கு ஏற்றவாறு ஒரு தனி மாடலை உருவாக்க முடியும். தற்போது, வானிலை ஆய்வு மையம் சென்னை, செங்கல்பட்டு போன்ற மாவட்டம் அல்லது மண்டலம் வாரியாகத்தான் வானிலை முன் அறிவிப்பை வெளியிடுகிறது.

டவுன் ஸ்கேலிங் செய்தால், நாம் சென்னையை நான்காகப் பிரித்து பகுதிவாரியாகக்கூட எவ்வளவு மழை பொழியும், புயலின் செயல்பாடு எப்படியிருக்கும் என்பது போன்ற தகவல்களைக் கணிக்க முடியும்," என்று அவர் குறிப்பிட்டார்.

மற்ற முறைகளைவிட இதில் துல்லியத்தன்மை அதிகமாக இருக்கும் என்கிறார் சாமுவேல் செல்வராஜ். "நான் பல ஆண்டுகளாக டவுன்ஸ்கேலிங் முறையைப் பின்பற்றி பல ஆய்வுகளைச் செய்துள்ளேன், ஆய்வு அறிக்கைகளையும் தயாரித்துள்ளேன். இதன்மூலம், மக்கள் பாதிப்பதற்கு முன்பே அரசு மிக விரைவில் திட்டமிட முடியும்," என்றும் அவர் தெரி-வித்தார்.

இவ்வாறு தெரிவித்த இணை பேராசிரியர் சாமுவேல் செல்வராஜ், "தமிழ்நாட்டிற்கு என பிரத்யேக வானிலை ஆய்வு மையத்தை உருவாக்கி, தனி வானிலை மாடல் ஒன்றை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். வல்லுநர்களை ஒருங்கிணைத்து தமிழக அரசு முயன்றால் இது சாத்தியமாகும். மக்கள் வெள்ளத்தில் தத்தளிப்பதைத் தடுக்க முடியும்,'' என்றும் நம்பிக்கையுடன் கூறினார்.

**டவுன் ஸ்கேலிங் முறையால் என்ன நன்மை?**

வானிலை முன்னறிவிப்பாளராக செயல்படும் பிரதீப் ஜான் பேசுகையில் "தமிழ்நாடு வெப்ப மண்டலப் பகுதி என்பதால், மீசோ ஸ்கேல் முறையை (Meso Scale Phenomena) பயன்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன.

ஆனால், டவுன் ஸ்கேலிங் முறையை வைத்து நமக்கான தனி மாடலாக உருவாக்க முடியும்," என்று கூறுகிறார்.

இதுவரை நாம் பின்பற்றும் மாடல்களைவிட அதிக துல்லியத்தன்மையுடன் கணிப்புகளை மேற்கொள்ள முடியும். தமிழகத்தில் சிலர் டவுன் ஸ்கேலிங் முறையை வெற்றிகரமாகச் செய்து வருகின்றனர் என்றும் பிரதீப் ஜான் கூறினார்.

தற்போது, "12 – 22 சதுர கி.மீ அளவில்தான் வானிலை குறித்த கணிப்புகள் வெளியிடப்படுகின்றன. டவுன் ஸ்கேலிங் முறையில் 12 சதுர கிலோ மீட்டருக்கும் குறைவான அளவிலேயே நம்மால் மழை, புயல் தாக்கம் குறித்து அறிய முடியும். சென்னையை சிறு சிறு மண்டலங்களாகப் பிரித்துக்கூட நம்மால் கணிப்பைக் கூற முடியும்.

ஆய்வாளர்களுக்கு வாய்ப்பு கொடுத்து, தமிழக அரசு தனி வானிலை ஆய்வு மையத்தை நிறுவினால், மழை, புயல் குறித்த கணிப்புகளை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல முடியும். அதன் மூலம் பாதிப்புகளைக் குறைக்க முடியும்,'' என்கிறார் அவர்.

**'அரசு கைவிட்ட திட்டத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும்'**

குறுகிய நிலப்பரப்பில் நிலவும் மாற்றங்களைக் கண்டறிந்து வானிலை முன்னறிவிப்பை உருவாக்கப் பயன்படும் மீசோ ஸ்கேலிங், டவுன்ஸ்கேலிங் மாதிரிகளைப் பயன்படுத்தி தமிழ்நாட்டிற்கு என பிரத்யேக வானிலை மாடலை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக முன்வைக்கப்படுகிறது என்கிறார் பூவலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த சுந்தர்ராஜன்.

"தமிழ்நாடு அரசு 2022 பட்ஜெட்டில், பேரிடர் தாக்கும் முன் உரிய நேரத்தில் எச்சரிக்கையை வழங்குவதற்கு, புதிய தொழில்நுட்பங்கள் கொண்ட ஒரு வானிலை ஆய்வு மைய கட்டமைப்பை உருவாக்க 10 கோடி ரூபாய் ஒதுக்குவதாக அறிவித்தது. ஆனால், இன்று வரை அது செயல்பாட்டிற்கே வரவில்லை,'' என்கிறார் அவர்.

கைவிடப்பட்ட இந்தத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் எனக் கூறிய சுந்தர்ராஜன், "தமிழ்நாட்டிற்கென தனி வானிலை ஆய்வு மையத்தை உடனடியாக நிறுவி வானிலை ஆய்வாளர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

ஆனால், இது ஒரு சில நாட்களில் செய்து முடிக்கும் விஷயம் அல்ல. "தற்போது தொடங்கினால் 5 முதல் 10 ஆண்டுகளில் ஓரளவுக்குத் துல்லியமான வானிலை கணிப்பை மேற்கொள்ள முடியும். அதுமட்டுமின்றி, அதற்கேற்ப கட்டமைப்புகளை மேம்படுத்தி வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க முடியும். இனியாவது அரசு விழித்துக்கொண்டு இதைச் செய்ய வேண்டும்," என்றும் சுந்தர்ராஜன் கூறினார்.

**'கூட்டு முயற்சி இருந்தால்தான் பலன் தரும்'**

'சென்னையில் ஒரு மழைக்காலம்' (COMK) அமைப்பைச் சேர்ந்த ஸ்ரீகாந்த், அவர்கள் பேசுகையில் ''புதிய மாடலை உருவாக்குவதுடன் நிறுத்தாமல், பேரிடர்க் காலங்களில் உருவாக்கப்படும் வார் ரூமில் அந்தத் தகவல்களை வைத்து

வெள்ள முன்னறிவிப்பைத் தயாரிக்க வேண்டும்," என்கிறார்.

எந்தப் பகுதியில் எவ்வளவு மழை பெய்தால் எந்த அளவுக்கு வெள்ளம் வெளியேறும், மழைநீர் செல்லும் பாதைகள் என்ன அந்தப் பாதைகளில் உள்ள தடைகள் என்ன? அதைச் சரி செய்வது எப்படி?

"இவற்றை உடனடியாகக் கணிக்க வேண்டும். அதுமட்டுமின்றி, மழைநீர் வழிந்தோடும் பகுதிகளில் சென்சார்களை பொறுத்தி நிகழ்நேர அவதானிப்புகளைச் (Real Time Observation) செய்து பார்க்க வேண்டும்.

இப்படிச் செய்தால் மட்டுமே, புதிய மாடலின் கணிப்பைப் பயனுள்ளதாக மாற்ற முடியும். புதிய மாடலை உருவாக்க முயலும்போது கூடவே இவற்றையும் மேற்கொள்ள அனைத்துத் துறைகளையும் இணைத்துச் செயல்பட வைக்க வேண்டும்,'' என்றார் ஸ்ரீகாந்த்.

**இந்திய வானிலை மையம் என்ன சொல்கிறது?**

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் துல்லியம் குறைவா, புதிய மாடல் உருவாக்குவது பயன்தருமா என்ற கேள்விகளை சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் பாலசந்திரனிடம் முன்வைத்தோம்.

அதற்கு விளக்கமளித்த பாலசந்திரன், ''இத்தனை ஆண்டுகளாக உலகளாவிய முன்னறிவிப்பு அமைப்பின் (GFS) தரவுகளை மேம்படுத்தி பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருவதால்தான் நாம் தற்போது இந்த அளவுக்காவது கணிப்புகளை வெளியிட முடிகிறது.

சிலர் இந்த முன்னறிவிப்பு அமைப்பு சரியில்லை, ஐரோப்பிய மாடல் நன்றாக இருக்கும் என்பது போன்றெல்லாம் கூறுகின்றனர். உண்மையில் மிகத் துல்லியமாக எந்த மாடலை கொண்டும் கூறிவிட முடியாது. எந்த மாடலாக இருந்தாலும் அதில் சில நேரங்களில் அறிவியல்ரீதியான தோல்விகள் (Scientific Failure) நடக்கும்,'' என்கிறார் பாலசந்திரன்.

மேலும் தொடர்ந்த அவர், ''மீசோ ஸ்கேல் முறை மற்றும் டவுன்ஸ்கேலிங் முறையிலான மாடல்களை பின்பற்றி இதுவரை செய்த முயற்சிகள் பெரிய அளவில் பயன் தரவில்லை. புதிது புதிதாக மாடல்களை உருவாக்கி நம்மால் துல்லியத்தன்மையை அதிகரிக்க முடியாது. ஒரு மாடலை மேம்படுத்த பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஓரிடத்தில் ஏரி இருந்திருக்கும், தற்போது அது கட்டடங்களாக மாறியிருக்கும். இதுபோன்ற ஒவ்வொரு விஷயமும் அந்த மாடலின் துல்லியத்தைப் பாதிக்கும்.

இருக்கின்ற வானிலை மாடலை மேம்படுத்தும் பணி தொடர்ந்து நடக்கிறது. இதை இன்னும் மேம்படுத்தினாலே போதும் துல்லியத்தன்மை அதிகரிக்கும்,'' என்றார் பாலசந்திரன்.

**- தமிழ் மணி**

# ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் விவசாயத்தை ஊக்குவித்தல்



வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் (ஐ.சி.ஏ.ஆர்) மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் (எஸ்.ஏ.யூ) மூலம் வேளாண் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை (ஆர் & டி) அரசாங்கம் ஊக்குவித்து வருகிறது. வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையின் பட்ஜெட் 2019-20 ஆம் ஆண்டில் ரூ.7846.17 கோடியிலிருந்து 2023-24 ஆம் ஆண்டில் ரூ.9504 கோடியாக அதிகரித்துள்ளது.

வேளாண் அறிவியல் மையத் திட்டத்தை நாட்டின் பல்வேறு மாநிலங்களில் அதன் பயன்பாடு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான தொழில்நுட்ப மதிப்பீடு மற்றும் செயல்விளக்கத்துடன் அரசு செயல்படுத்துகிறது. அதன் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக, விவசாயிகள், விவசாய பெண்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து வேளாண் அறிவியல் மையங்கள் பயிற்சி அளிக்கின்றன.

2022-23 ஆம் ஆண்டில் பயிர் உற்பத்தி, தோட்டக்கலை, மண்வளம் மற்றும் வள மேலாண்மை, கால்நடை உற்பத்தி மற்றும் மேலாண்மை, மனை அறிவியல் / மகளிர் மேம்பாடு, வேளாண் பொறியியல், தாவர பாதுகாப்பு மற்றும் மீன்வளம் ஆகியவற்றில் 19.53 இலட்சம் விவசாயிகளுக்கு பயிற்சியளித்து, 2,98,932 முன்னணி செயல் விளக்கங்களை நடத்தியுள்ளன.

இத்தகவலை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

**- கு.தீபக்**

# பழமொழிகள்

- தவளை கத்தினால் தானே மழை
- அந்தி ஈசல் பூத்தால் அடை மழைக்கு அச்சாரம்
- தும்பி பறந்தால் தூரத்தில் மழை
- எறும்பு ஏறில் பெரும் புயல்
- மார்கழி மழை மண்ணுக்கு உதவாது
- தை மழை நெய் மழை
- மாசிப்பனி மச்சையும் துளைக்கும்
- தையும் மாசியும் வீடு மேய்த்து உறங்கு
- புத்துகண்டு கிணறு வெட்டு
- வெள்ளமே ஆனாலும் பள்ளத்தே பயிர்செய்
- காணி தேடினும் கரிசல்மண் தேடு
- களர் கெட பிரண்டையைப் புதை
- கெட்ட நிலத்துக்கு எட்டு வன்னி கெட்டகுடும்பத்துக்கு எட்டு வெள்ளாடு
- நன்னிலம் கொழுஞ்சி நடுநிலம் கரந்தை கடைநிலம் எருக்கு
- நீரும் நிலமும் இருந்தாலும் பருவம் பார்த்து பயிர் செய்
- ஆடிப்பட்டம் பயிர் செய்
- விண் பொய்த்தால் மண் பொய்க்கும்
- மழையடி புஞ்சை மதகடி நஞ்சை
- களரை நம்பி கெட்டவனும் இல்லை மணலை நம்பி வாழ்ந்தவனும் இல்லை
- உழவில்லாத நிலமும் மிளகில்லாத கறியும் வழ வழ
- அகல உழவதைவிட ஆழ உழுவது மேல்
- புஞ்சைக்கு நாலுஉழவு நஞ்சைக்கு ஏழு உழவு
- குப்பை இல்லாத வெள்ளாமை சப்பை
- ஆடுபயிர் காட்டும் ஆவாரை கதிர் கட்டும்
- கூளம் பரப்பி கோமியம் சேர்
- ஆற்று வண்டல் தேற்றும் பயிரை
- நிலத்தில் எழுத்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்
- காய்ச்சலும் பாய்ச்சலும் வேண்டும்
- தேங்கி கெட்டது நிலம் தேங்காமல் கெட்டது குளம்
- கோரையை கொல்ல கொள்ளுப்பயிர் விதை
- சொத்தைப்போல் விதையை பேணவேண்டும்
- விதை பாதி வேலை பாதி
- காய்த்த வித்திற்கு பழுதில்லை
- பாழில் போட்டாலும் பட்டத்தில் போடு
- கோப்பு தப்பினால் குப்பையும் பயிராகாது
- ஆடி ஐந்தில் விதைத்த விதையும் புரட்டாசி பதினைந்தில் நட்ட நடவும் பெரியோர்கள் வைத்த தனம்
- கலக்க விதைத்தால் களஞ்சியம் நிறையும் அடர விதைத்தால் போர் உயரும்
- விதைகள் ஆழப் புதைப்பது பழுதாம்
- ஆயிரம் கால பயிர் நெல்லுக்கு ஒரு அந்து

**- அன்பு மணி**




மலைகளைப் பாதுகாக்கவும், மலைப்பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், மலையின் பல்லுயிரியலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், 2002ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவை டிசம்பர் 11ஆம் நாளை உலக மலைகள் நாளாக அறிவித்து, 2003ஆம் ஆண்டிலிருந்து சிறப்பித்துவருகிறது. இதனை, ஐ.நா.வின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் முன்னின்று நடத்தி வருகின்றது. இவ்வாண்டிற்கான இக்கொண்டாட்டத்தின் தலைப்பாக 'மலையின் சூழலமைப்பை மீட்டெடுத்தல்' என்பது எடுக்கப்பட்டுள்ளது.

உலக மலைகள் தினத்தை நாம் உலகம் முழுவதும் சிறப்பிப்பது, நம் உடன்வாழ் மக்களுக்கும் நம் வருங்காலத் தலைமுறைக்கும் நம் வாழ்வில் மலைகளின் பங்களிப்பை உணர்த்துவதற்கே. அதாவது, சுத்தமான நீரை வழங்குவதற்கும், சுத்தமான ஆற்றலைத் தருவதற்கும், உணவை தர மட்டுமல்ல, மனதிற்கு புத்துணர்ச்சியூட்டும் பொழுதுபோக்கிற்கும் மலைகள் சிறப்புப் பங்காற்றுகின்றன. மலைகள் என்பவை இயற்கை நமக்களித்த முத்துக் குவியல் என்னும் புதையல். உலகின் 15 விழுக்காட்டு மக்கள் இந்த மலைகளைத்தான் தங்கள் உறைவிடமாகக் கொண்டுள்ளனர். உலக மனித குலத்தின் தண்ணீர் தேவைகளுள் 50 விழுக்காட்டை மலைகள்தான் நிறைவுச் செய்கின்றன. இதன் வழியாகத்தான் விவசாயம், சுத்தமான ஆற்றல், அதாவது மின்சக்தி போன்றவையும், மூலிகை மருந்துக்களும் ஏனைய மருந்துக்களும் கிட்டுகின்றன. உலகின் மிக முக்கியமான உணவுப் பொருட்களில் சில, மலைகளில் வளரும் காட்டுச் செடிகளின் மூலமாகவே கிடைக்கின்றன. உதாரணமாக, மெக்சிகோவின் மேட்டுநிலப் பகுதிகளில் சோளமும், பெரு நாட்டின் ஆண்டிஸில் உருளைக் கிழங்கும் தக்காளியும், கவ்காசுஸில் கோதுமையும் கிடைக்கின்றன.

உலக நிலப்பரப்பில், 27 விழுக்காடு மலைகளே உள்ளன. தண்ணீர், உணவு, சுத்தமான காற்று என அனைத்தும் நமக்கு கிடைக்க மலைகள் மற்றும் அதில் உள்ள வனப்பகுதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. விவசாயத்திற்கு மழை எப்படி முக்கியமானதோ, அதனைப் போன்றே மழைக்கு, மலைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. மலைகளில் உள்ள தாவரங்கள் அழிக்கப்படுவதையும், கற்களுக்காக மலைகள் வெட்டி எடுக்கப்படுவதையும் தவிர்ப்பதே, எதிர்வரும் தலைமுறையினரின் நலவாழ்வுக்கு செய்யும் பேருதவியாகும். சங்கத் தமிழ் நூல்கள் எங்கும் மலையைப் போற்றிய பாடல்கள் பரவிக்கிடக்கின்றன. குறிஞ்சியைப் பாடி மலைவளம் போற்றினர் பழந் தமிழர்.

### உயர்ந்த மலைகள்:

உலகில் மிக உயர்ந்த மலைகள் என்று பார்த்தோமானால், முதலில் எவரெஸ்ட் மலை சிகரம். கடல் மட்டத்திலிருந்து 8,846 மீட்டர் உயரத்தில், இது உலகின் மிக உயரமான இமயமலையின் உச்சியில் அமைந்துள்ளது.

K2 மலைகள், கடல் மட்டத்திலிருந்து 8611 மீட்டர் உயரத்தில், ஏறுவதற்கு மிகவும் கடினமான மலைகளில் ஒன்று. இது சீனாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அமைந்துள்ளது.

கல்கரி காடு. இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையில் அமைந்துள்ள இது 8598 மீட்டர் உயரம் கொண்டது.

6,962 மீட்டர் உயரத்தில், அர்ஜென்டினாவின் ஆண்டிஸில் உள்ள மெண்டோசா மாகாணத்தில் அமைந்துள்ள அகோன்காகுவா, அமெரிக்காவின் மிக உயரமான சிகரமாகும்.

சிலே மற்றும் அர்ஜென்டினா இடையேயான எல்லையில் உள்ள ஆண்டிஸின் ஒரு பகுதியாக உள்ள ஓஜோஸ் டெல் சலாடோ, 6891.3 மீட்டர் உயரம் கொண்ட உலகின் மிக உயரமான எரிமலை ஆகும்.

அடுத்து, அட்லஸ் மலைகள் வட ஆபிரிக்காவில் அமைந்துள்ளன. சில தனித்துவமான விடயங்களுக்காக அறியப்படுகின்றன. இந்த விடயங்களில் கரடுமுரடான நிலப்பரப்பு, பாறை சரிவுகள் மற்றும் 4167 மீட்டர் உயரம் ஆகியவை அடங்கும்.

அட்லஸ் மலைகள் என்று அழைக்கப்படும் மலைத்தொடர் மொராக்கோ, அல்ஜீரியா மற்றும் துனிசியா ஆகிய நாடுகளில் 2.400 கிலோமீட்டர் தூரம் வரை நீண்டுள்ளது. இந்த மலைத்தொடரின் மிக உயரமான சிகரம் துப்கல். இது கடல் மட்டத்திலிருந்து 4.167 மீட்டர் உயரத்தில் உள்ளது.

இந்திய நாட்டின் அரணாக இமயமலை விளங்குகின்ற அதேவேளை, இமயத்தைத் தொடர்ந்து மேற்குத் தொடர்ச்சி மலைகள் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. பண்பாட்டுத் தொன்மையை இன்றும் தன்னகத்தே வைத்து பிரமிக்க வைக்கும் நீலகிரி, நமது பண்பாட்டை பறைசாற்றும் குறிஞ்சியைத் தன்னகத்தேக் கொண்டது.

நம்முடைய மிகப் பெரிய ஆறுகளுக்கும் நீர்த்தேக்கங்களுக்கும் மலைகளே ஊற்றுமூலமாக விளங்குகின்றன. வட அமெரிக்காவில் பாயும் பெரிய ஆறான கொலராதோ ஆறும் ரியோ கிரேன்டி ஆறும் ராக்கி மலைகளிலிருந்துதான் தண்ணீரைப் பெறுகின்றன. உலக மக்கள்தொகையில் பாதிப் பேர் தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலோர் இமாலயம்–காரகோரம்–பாமீர்–திபெத் பகுதிகளில் இருக்கும் பெரிய மலைத் தொடர்களில் பெய்யும் மழையைச் சார்ந்தே வாழ்கின்றனர். பருவமழை காலங்களில் வீசும் பலத்த காற்றைத் தடுத்து நிறுத்தும் அரணாகவும் மலைகள் உள்ளன. இந்த மலைகள் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே உருவானதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இயற்கை வளங்களை வாரி வழங்கும் களஞ்சியங்களாகவே பெரும்பாலும் மலைகள் கருதப்படுகின்றன. ஆனால் அங்கு வாழ்கிற மக்களுக்கும் அங்குள்ள சூழலியல் அமைப்புகளுக்கும் போதுமான கவனம் செலுத்தப்படுவது இல்லை என்பதே உண்மை.

மலை வாழிடத்தில் உள்ள பெரும்பாலான மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. இதனால் மண்அரிப்பு ஏற்பட்டு உயிரினங்களின் வாழிடம் கேள்விக் குறியாகி உள்ளது. மலை வாழிடம் சுற்றுலாத் தலமாக மாற்றப்படும்போது வாகனங்கள், வீசியெறியும் குப்பைகள் ஆகியவற்றால் மாசுபாடு உருவாகிறது. இம்மாசுபாடு மலை வாழிடத்தைப் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. மலைகளில் உள்ள கனிமங்கள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் மனிதனால் சுரண்டப்படும் போது அவை பெரும் பாதிப்பினை மலை வாழிடத்தில் ஏற்படுத்துகின்றது.

**மலை அழிவுற காரணம்:**

விவசாய முறையின் மாற்றம், செயற்கை முறையின் தாக்கம், பழமை முறையை கடைபிடிக்காமை, இயற்கை முறையை பின் தொடராமை, தாவர அழிப்பு, மரம் வெட்டுதல், வேட்டையாடுதல் ஆகியவை மலைவாழ் உயிரினங்களுக்கும் மண்ணுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. தற்போது, பனிப்பாறை உருகுதல், கடல் மட்டம் உயர்தல் போன்றவையும் அழிவுக்குக் காரணமாக உள்ளன. மரங்களை வெட்டுவதன் காரணமாக கார்பன் – டை – ஆக்சைடு அளவு வளி மண்டலத்தில் அதிகரித்து பல பிரச்சனைகளை உண்டாக்குகிறது. உலகின் உணவுத் தேவையில் 80 விழுக்காட்டை வழங்கிவரும் 20 தாவர இனங்களில் 6 இனங்கள் மலைகளில் உருவானவை என்பதை மனதில் கொள்வோம். ஆனால் இன்றோ, மலைகளுக்கேயுரிய உயிரினங்களில் 84 விழுக்காட்டை அழிவின் விளிம்புக்குக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், நீலகிரி மாவட்டத்தில் மலை மற்றும் வனப்பகுதிகளை அழித்து, சொகுசு விடுதி, பங்களா என கட்டடங்கள் பெருகி வருகின்றன. இதன் எதிரொலியாக பருவ மழை குறித்த நேரத்தில் பெய்யாமல் போவதுடன் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுவது வாடிக்கையாகியுள்ளது.

ஆதி மனிதன் மலைகளில் வாழ்ந்தான். மலை மீது வாழ்ந்த மனிதனின் அறிவும் பரந்த மனமும் எப்படிப்பட்டதென்று எடுத்துரைத்து நிற்கிறது பறம்பு நாட்டு பாரியின் வரலாறு.

மலைப் பகுதியில் உள்ள மரங்கள்தான் மழைப் பொழிவுக்கு முக்கிய காரணமாக உள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரில், வன உயிரினங்கள் வாழும் சூழல் மண்டலமாக நீலகிரி மாவட்டம் திகழ்கிறது. மேலும் தமிழகத்தின் உயர்ந்த சிகரமாக அழைக்கப்படுவது தொட்டபெட்டா மலை சிகரம். நீலகிரி மாவட்டத்தில் வாழும் பழங்குடியின மக்கள் மலைகளை புனித தலங்களாக பூஜித்து வந்துள்ளனர். குறிப்பாக, மல்லேஸ்வரன் முடி, தோடர்களின் புனித சிகரம், ரங்கசாமி முகடு, இருளர்களின் புனிதமான மலையாக உள்ளது. மலை மாவட்டமான நீலகிரியில் மழை பெய்தால் தான் சமவெளி மாவட்டங்களான ஈரோடு, திருப்பூர், நாமக்கல், பவானிசாகர், கரூர், கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் நீர் பாசனம் செய்ய முடியும். இதன் மூலம் பல இலட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இன்னும் சொல்லப் போனால் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்குகூட இங்கிருந்து நீர் சென்றடைகிறது. இங்கு காணக்கூடிய ஆர்கிட் மலர்கள், நீலகிரிதார் என்றழைக்கப்படும் வரையாடுகள் மிகவும் அபூர்வமானவை.

**எப்படி மலைகளின் சூழலியலைக் காப்பது?**

மனிதனில் மாற்றம் உருவாக வேண்டும். அதாவது மனிதன் தன் பேராசையை விட்டொழிப்பதன் வழியாகவே நன்மை பெருக வழியுண்டு. இயற்கையை, இயற்கையாக நேசிக்க வேண்டும், வளங்களை யாசிக்க வேண்டுமேயொழிய பொன்முட்டையிடும் அந்த வாத்தை பேராசையால் தனதாக்க யோசிக்கக் கூடாது. நிலங்களை அவற்றின் அமைப்பு, காலநிலைக்கேற்ப வகைப்படுத்தி இயற்கையை வணங்கினான் தமிழன். குறிஞ்சியைக் கோயிலாக்கி கோலோச்சியக் காலத்தில் மலைகளை புனித இடமாகப் போற்றினான். தற்போதைய நிலையோ கவலை தருவதாக உள்ளது. மலைப்பகுதிகளில் அதிகமான தங்கும் விடுதிகள், பங்களாக்கள், கேளிக்கை அரங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. இது தவிர, காலநிலை மாற்றமும், மலைகள் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இயற்கையை தனதாக்க எண்ணும் மனிதன் அவற்றை இரசிக்கவும், நேசிக்கவும் செய்வதை விடுத்து, தனக்குரியதாக மாற்றிக் கொள்ள நினைத்ததன் விளைவே மலைகளின் அழிவு. புனிதமாகக் கருதிய உயர்ந்த இடத்தை வணங்கி வந்த நிலைமாறி, அப்பகுதிகளை தங்கள் பொழுதைக் கழிக்கும் வாழிடமாக மாற்ற நினைத்ததன் விளைவாகவே, வெப்பமயமாதலும், இவ்வெப்பத்தால் காடுகள் அழிந்து அதன் வழி மண்ணும் சரிந்து உயர்ந்த நிலப்பகுதி குறைந்து குன்றாக மாறியதும் உண்மை.

மலைச் சரிவுகளில் உள்ள மரங்களை வெட்டுவதை தவிர்க்க வேண்டும். இதனால் மண் அரிப்பு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

மலை வளத்தைக் காப்போம். வருங்கால சந்ததியினருக்கு அதனை நம் கொடையாக வழங்குவோம்.

**– ராதிகா, ஆசிரியர்**




# 2015ஐ விட 2023இல் அதிக மழை பெய்ததா? தரவுகள் என்ன சொல்கின்றன?

2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளமும் 2023-ஆம் ஆண்டு மிக்ஜாம் புயலின் காரணமாக ஏற்பட்ட வெள்ளமும் தொடர்ந்து ஒப்பிடப்பட்டு வருகின்றன.

இரு சந்தர்பங்களிலும் வெவ்வேறு கட்சிகள் ஆட்சியில் இருந்ததாலும் இந்த விவாதம் தீவிரமாக சமூக வலைதளங்களில் சூடாக பரவிவருகிறது. எந்த ஆண்டு அதிக மழை பெய்தது, எத்தனை நாட்கள் பெய்தது என எண்ணிக்கைகளைக் கொண்டு முரணான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

மிக்ஜாம் புயலின் போது பெய்த மழை 47 ஆண்டுகளில் இல்லாத மழை என்று தமிழக அரசு கூறியது. இந்திய வானிலை ஆய்வு மையம் X தளத்தில் வெளியிட்டிருந்த தரவுகளின் படி, ஒரு நாளில் பெய்த மழை அளவு 2023-ஐ விட 2015-ஆம் ஆண்டே அதிகமாக இருப்பதாக கூறுகிறது.

**இந்நிலையில், தரவுகள் என்ன சொல்கின்றன, அவற்றை எப்படிப் புரிந்து கொள்வது?**

இந்திய வானிலை ஆய்வு மைய தரவுகள் அனைத்தும் காலை 8.30 மணி முதல் மறு நாள் காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரங்களில் மழை எவ்வளவு பெய்துள்ளது என்பதைக் கணக்கிடுகிறது. அதன் படி, 2015-ஆம் ஆண்டு அதிக மழை பெய்த டிசம்பர் 2-ஆம் தேதி சென்னையில் 29 செ.மீ மழை பதிவாகியது.

அதே முறையில் கணக்கிடும் போது, 2023-ஆம் ஆண்டு டிசம்பர் 4-ஆம் தேதி மிக்ஜம் புயல் தாக்கிய நாளில் சென்னையில் 23 செ.மீ மழை பதிவாகியது.

பெரு மழை பெய்த நாட்களுக்கு முந்தைய நாளும், அடுத்த நாளும் எவ்வளவு மழை பெய்தன என்ற தரவுகள் உள்ளன. 2015-ஆம் ஆண்டில், டிசம்பர் 1-ஆம் தேதி 3.9 செ.மீ மழையும், டிசம்பர் 3-ஆம் தேதி1.6 செ.மீ மழையும் பதிவாகியது. அதாவது டிசம்பர் 1, 2, மற்றும் 3 தேதிகளில் மொத்தம் 34.9 செ.மீ மழை சென்னையில் பதிவாகியது.

அதே போன்று 2023-ஆம் ஆண்டில் டிசம்பர் 3-ஆம் தேதி 6.2 செ.மீ மழையும், டிசம்பர் 5ம் தேதி 23.8 செ.மீ மழையும் பதிவாகியது. அதாவது டிசம்பர் 3, 4 மற்றும் 5 தேதிகளில் மொத்தம் 53.1 செ.மீ மழை சென்னையில் பதிவாகியது.

**2015-இல் தீவிர மழை இல்லை'**

புயல், மழை வெள்ளம் ஆகியவற்றை பற்றி ஒப்பிட்டு பேசும்போது, மழை அளவு தரவுகளை தவிர மற்றும் வேறு சில அம்சங்களும் உள்ளன.

“கடந்த 2015-ஆம் ஆண்டு வெள்ளம் ஏற்பட்டது செம்பரம்பாக்கம் ஏரி திறக்கப்பட்டதால். 2015-இல் புயல் ஏதும் உருவாகவில்லை. கிழக்கிலிருந்து காற்றாழுத்த தாழ்வு நிலை உருவானது. 2023-இல் மழை தொடங்கிய டிசம்பர் 3-ஆம் தேதி இரவு 8.30 மணி முதல் டிசம்பர் 4-ஆம் தேதி இரவு 8.30 மணி வரையிலான 24 மணி நேரங்களில் 40 செ.மீ மழை பெய்துள்ளது. இந்த அளவுக்கான தீவிர மழை 2015-ல் பெய்யவில்லை,” என்று சென்னை வானிலை ஆய்வு மையத்தின் முன்னாள் துணை இயக்குநர் ஒய்.இ.எ ராஜ் பிபிசி தமிழிடம் கூறினார்.

ஒவ்வொரு புயலும் தனித்துவமானது, அவற்றை ஒன்றோடு ஒன்று ஒப்பிட முடியாது என்கிறார் மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெவலப்மண்ட் ஸ்டடீஸ் முன்னாள் பேராசிரியரும் நீர் குறித்த விரிவான பல ஆய்வுகளை நடத்தி வரும் எஸ். ஜனகராஜ்.

“2015-ஆம் ஆண்டு அடையாற்றின் மேல் படுகையில் தான் அதிக மழை பெய்தது. அப்போது, காஞ் சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களிலேயே சென்னையை விட அதிக மழை பெய்தது. சென்னையின் தென் பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டதற்கு காரணம், அடையாற்றில்



வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது தான். அதற்கு காரணம் செம்பரம்பாக்கம் ஏரியை திடீரென திறந்துவிட்டது ஆகும்," என்றார்.

**சென்னைக்கு 30 கி.மீ தொலைவில் புயல்**

2015-ஆம் ஆண்டில் 14 மணி நேரத்தில் 20 செ.மீ மழை பெய்தவுடன், செம்பரம்பாக்கம் ஏரி தனது முழு கொள்ளளவை வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. ஏரி உடைந்துவிடும் ஆபத்து இருந்ததால் ஒரே நேரத்தில் 29,400 கன அடி நீர் செம்பரம்பாக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. செம்பரம்பாக்கத்திலிருந்து 900 கன அடி மட்டுமே நீர் திறந்துவிடப்பட்ட நிலையில் திடீரென 29,000 கன அடி திறக்கப்பட்டது, நிலைமையை மோசமாக்கியது. அடையாற்றின் கரை ஓரங்களில் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. 2023-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம் புயலினால் பெய்த மழை காராணமாகவே ஏற்பட்டது.

மிக்ஜாம் புயல் சென்னைக்கு அருகில் உள்ள கடல் பகுதியில் மிக நீண்ட நேரம் நிலை கொண்டு இருந்ததன் காரணமாக அதி கனமழை தொடர்ந்து பெய்தது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. மேலும் சென்னைக்கு மிக நெருக்கமாக வெறும் 90 கி.மீ. தொலைவில் நிலைக்கொண்டிருந்தது. மணிக்கு 10 - 18 கி.மீ. வேகத்தில் செல்லும் புயல் வெறும் 7 கி.மீ. வேகத்தில் நகர்ந்தது அதன் வேகம் மேலும் குறைந்து மணிக்கு 5 கி.மீ. என்று இருந்தபோது புயல் கிட்டத்தட்ட சென்னைக்கு அருகிலேயே ஸ்தம்பித்து நிற்பது போல் ஆனது.

சென்னை வானிலை ஆய்வு மையத்தின் முன்னாள் துணை இயக்குநர் ஒய்.இ.எ ராஜ், "மிக்ஜாம் புயல் 16 முதல் 18 மணி நேரங்கள் சென்னைக்கு அருகிலான கடல் பகுதியில் நிலைக் கொண்டிருந்தது. புயலின் மைய பகுதி, சென்னை-யிலிருந்து 80-90 கி.மீ அருகில் இருந்தது. ஆனால், புயலின் வெளிப்புற பகுதியில் தான் தீவிர காற்றும் மேகங்களும் இருக்கும். அந்த பகுதி சென்னையிலிருந்து சுமார் 30 கி.மீ தொலைவில் இருந்தது. அதனால் தான் மழை தீவிரமாக பெய்தது," என்றார்.

மிக்ஜாம் புயல் எப்போது உருவாகும், புயலின் பாதை என்னவாக இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் துல்லியமாக கூறியிருந்தாலும், புயல் இவ்வளவு நேரம் கடல் பகுதியில் நிலைக் கொண்டிருக்கும் என்பது யாரும் எதிர்ப்பார்க்காதது.

**மிக்ஜாம் போன்ற 1976 புயல்**

மிக்ஜாம் புயல் சென்னை கரைக்கு மிக அருகில் வந்து, சென்னையை உரசி உரசி சென்று மேலும் வடக்கு நோக்கி நகர்ந்தது.

1976-ஆம் ஆண்டு உருவான புயலின் பாதையும் இதுவாகவே இருந்தது என்கிறார் சென்னை வானிலை ஆய்வு மையத்தின் முன்னாள் துணை இயக்குநர் ஒய்.இ.எ ராஜ்.

"சென்னையில் அதிக அளவிலான வெள்ளத்தை முதல் முறையாக ஏற்படுத்தியது அந்த புயல். மிக்ஜாம் புயல் கடந்து சென்ற அதே பாதையில் சென்றது, ஆனால் மிக்ஜாம் போல வடக்கு நோக்கி செல்லவில்லை. அப்போது சென்னை நுங்கம்பாக்கத்தில் 24 மணி நேரத்தில் 45 செ.மீ மழை பதிவானது. இப்போதும், இதுவே 24 மணி நேரங்களில் சென்னையில் பதிவான அதிகபட்ச மழையாகும்," என்றார்.

மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெவலப்மண்ட் ஸ்டடீஸ் முன்னாள் பேராசிரியர் எஸ். ஜனகராஜ், "1976-க்கு பிறகு, சென்னையில் குறுகிய காலத்தில் அதிக மழை பெய்தது இதுவே முதல் முறையாகும். எனவே 47 ஆண்டுகளில் இல்லாத அளவிலான மழை இது என கூறலாம். ஆனால், மழையின் தாக்கம் 1976-ஐ விட இப்போது தான் அதிகமாக உள்ளது. இப்போது, நீர் வழிப்பாதைகள், ஆறுகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தண்ணீர் பூமியின் உள் செல்வதற்கான நிலம் குறைந்துக் கொண்டே வருகிறது. பெய்யும் மழையில் 95% ஆறுகளில், கடல்களில் கலக்கிறது," என்றார்.

- M.**சந்திரசேகர்**

# வேளச்சேரி கட்டுமான பள்ளத்தில் சிக்கியவர்களை மீட்க தாமதம் ஆனது ஏன்?



சென்னை வேளச்சேரியில் கட்டுமான நிறுவனம் தோண்டிய பள்ளத்திற்கு அருகே நிலம் சரிந்த விபத்தில் ஐந்து பேர் பள்ளத்தில் விழுந்து சிக்கினர். அவர்களில் மூன்று பேர் உடனடியாக மீட்கப்பட்ட நிலையில், இருவர் வெள்ளிக்கிழமை அன்று சடலமாக மீட்கப்பட்டனர்.

ஐந்து பேர் சிக்கிய விபத்தில், இருவரை மட்டும் மீட்க தாமதமானது ஏன்? மீட்புப் பணியில் இருந்த சவால்கள் என்ன? இறந்த இருவர் பள்ளத்தில் சிக்கியது எப்படி?

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கனமழை பெய்து கொண்டிருந்தது.

இந்நிலையில், திங்கள்கிழமை காலை மிக்ஜாம் புயல் தமிழகத்தின் கடலோரப் பகுதியைக் கடக்கும்போது, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அதிகனமழை பெய்து கொண்டிருந்தது.

அப்போது, வேளச்சேரியில் உள்ள கிண்டி ஐந்து பர்லாங் ஸ்ரீ வேளச்சேரி சாலை இணைப்புச் சந்திப்பில் இருந்த பெட்ரோல் பங்க்கின் அருகில் தனியார் நிறுவனத்தின் கட்டுமானப் பணி நடந்துகொண்டிருந்தது. அங்கு கட்டப்படும் அடுக்குமாடி கட்டடத்தின் மூன்று அடுக்கு வாகன நிறுத்துமிடத்திற்காக சுமார் 50 முதல் 60 அடிக்கு பள்ளம் தோண்டியிருந்தனர்.

மழை பெய்த அன்று காலை, அந்தக் கட்டுமான தளத்தில் இருந்த கன்டெய்னர், ஜெனரேட்டர் அறை மற்றும் அருகில் இருந்த பெட்ரோல் பங்க்கின் தற்காலிக கழிவறை ஆகியவை அந்தப் பள்ளத்தில் சரிந்தது. அப்போது, கழிவறை, ஜெனரேட்டர் அறை மற்றும் கன்டெய்னர் மீதிருந்த ஐந்து பேர் அந்தப் பள்ளத்தில் சிக்கினர்.

இதை நேரில் பார்த்த அருகில் இருந்த போக்குவரத்து காவல்துறையினர் மற்றும் அருகில் இருந்தவர்கள், பள்ளத்தின் மேல் பகுதியில் சிக்கியிருந்த மூன்று பேரை அப்போதே மீட்டனர். பிறகு, அந்த பெட்ரோல் பங்கில் பணியாற்றிய வேளச்சேரி விஜயநகரை சேர்ந்த 24 வயதான நரேஷ் மற்றும் கட்டுமான தளத்தில் பணியாற்றிய 29 வயதான கள பொறியாளர் (சைட் இன்ஜினியர்) ஜெயசீலன் ஆகியோரை பள்ளத்தில் காணவில்லை.

அவர்கள் பள்ளத்திற்கு அடியில் சிக்கியிருப்பார்கள் என அஞ்சிய நிலையில், அவர்களை மீட்பதற்காக தீயணைப்புத் துறையினரும், ஆவடியில் உள்ள தேசிய பேரிடர் மீட்புப் பணியினரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

திங்கள்கிழமை தொடர்ந்து கனமழை பெய்து வந்ததால், இருவரையும் கண்டுபிடிக்க முடியாமல், மீட்புப் படையினர் திணறினர். ஐந்து நாட்கள் கடும் முயற்சிக்குப் பின்னர், இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர்.




சுமார் 60 அடி பள்ளத்தில் தற்காலிக கழிவறையும், கன்டெய்னரும் விழுந்தது. இதற்குக் கீழே இருவரும் சிக்கியிருக்கக்கூடும் என அஞ்சிய நிலையில், பள்ளத்தில் தொடர்ந்து மழைநீர் வடிந்து வந்ததால், மழைநீரை அகற்றினால் மட்டுமே, அவர்களை மீட்க முடியும் என்ற சூழல் உருவானது.

ஏற்கெனவே நிலம் சரிந்து விபத்து ஏற்பட்டதால், அருகில் அதிக எடைகொண்ட இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைக் கொண்டு வந்து, தண்ணீரையோ, மண் சரிவையே வெளியேற்றுவதில் நடைமுறைச் சிக்கல் இருந்ததாக மீட்புப் பணியில் இருந்த தீயணைப்புத் துறையினரும், தேசிய பேரிடர் மீட்புப் படையினரும் தெரிவித்தனர்.

இந்நிலையில், புதன் மற்றும் வியாழக்கிழமை அன்று, 60 அடி பள்ளத்தில் தேங்கியிருந்த தண்ணீரை வெளியேற்றுவதற்காக என்.எல்.சி, நிறுவனத்திடம் இருந்து அதிநவீன குழாய் வரவழைக்கப்பட்டு, பள்ளத்தில் உள்ள நீரை வெளியேற்றினர். பள்ளத்தில் உள்ள நீரை வெளியேற்றினாலும், தொடர்ந்து மண் சரிவு ஏற்பட்டுக் கொண்டிருந்ததால், மனிதர்களை பள்ளத்தில் இறக்கி மீட்புப் பணியைத் தொடர முடியாத நிலை இருந்தது.

இந்நிலையில், தொடர்ந்து சரிந்து வரும் மண்ணை அகற்ற எல்&டி நிறுவனத்தின் அதிநவீன இயந்திரங்களைக் கொண்டு, சரிந்திருந்த மண்ணை அகற்றினர். இதனால், மீட்புப்பணி வியாழக்கிழமை இரவு சற்று வேகம் எடுத்தது. அதைத் தொடர்ந்து, வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில், நரேஷ் சடலமாக மீட்டெடுக்கப்பட்டார்.

தொடர்ந்து, ஜெயசீலனையும் மீட்கும் பணி நடைபெற்று வந்தது. காலை 11 மணியளில் மீட்புப்பணியை பார்வையிட வந்த சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன், விரைவில் மீட்கப்படுவார் எனத் தெரிவித்தார்.

“அவர் உயிருடன் இருக்கிறார் என்று பொய் கூற விரும்பவில்லை. துர்நாற்றம் வீசும் பகுதியில் தேடுகிறோம். அதிகபட்சம் அடுத்த மூன்று மணிநேரத்தில் மீட்டுவிடுவோம்,” எனத் தெரிவித்தார்.

மதியம் 1.30 மணியளவில், ஜெயசீலனும் சடலமாக மீட்கப்பட்டார். மீட்கப்பட்ட இருவரது சடலமும் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

**மீட்புப் பணியில் தாமதம் ஏன்?**

மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்த தேசிய பேரிடர் மீட்புப்பணியைச் சேர்ந்த முத்துக்குமார் பேசுகையில், தண்ணீர் மற்றும் மண் சரிவு என இரண்டையும் ஒரே நேரத்தில் சந்தித்ததால், மீட்பில் தாமதம் ஏற்பட்டதாகக் கூறினார்.

“முதல் நாளே நாங்கள் உள்ளே இறங்கிப் பார்த்தோம். அப்போதுதான் இது 60 அடி ஆழம் எனத் தெரிந்தது. மேலும், அந்தப் பள்ளத்தில் தண்ணீர் அதிகம் தேங்கியிருந்தது. மழை காரணமாக அருகில் இருந்த நிலமும் சரிந்துகொண்டே இருந்தது. இவைபோக, அவர்கள் கட்டுமானத்திற்காக 60 அடி ஆழத்திற்குத் தோண்டியிருந்ததால், உள்ளே கான்கிரீட்டுக்காக போட்டிருந்த கம்பிகளும் இருந்தன,” என்றார் முத்துக்குமார்.

இதுவரை தமிழ்நாட்டைச் சேர்ந்த மீட்புப்படையினர் மேற்கொண்ட மீட்புப் பணிகளில், பெரும்பாலும் அது பள்ளத்தில் நிலச்சரிவு மீட்பாகவும், அல்லது ஆறு, வெள்ளத்தில் இருந்து மீட்டதாக இருந்ததாகவும், இந்த மீட்புப் பணியில் இரண்டு

சவால்களையும் ஒரே நேரத்தில் எதிர்கொள்ள வேண்டி-யிருந்ததாகவும் முத்துக்குமார் கூறினார்.

மேலும், அதில் வேறு யாரேனும் சிக்கியிருக்க வாய்ப்பிருக்கிறதா எனக் கேட்டபோது, இருவரை மட்டும்தான் காணவில்லை என புகார் தெரிவித்திருந்ததாகவும், இருவரின் சடலத்தையும் மீட்டுள்ளதாகவும் முத்துக்குமார் கூறினார்.

**அதிகனமழையில் அதிகாலை வரவழைக்கப்பட்ட ஜெயசீலன்**

திருமணமாகி 11 மாதங்களே ஆன ஜெயசீலன், தனது மனைவியுடன் வேளச்சேரி பகுதியில் வசித்து வருகிறார். ஜெயசீலன் பள்ளத்தில் சிக்கிய தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த அவரது மனைவி மஞ்சு, அவர் உடல் மீட்கப்படும் வரையில் ஐந்து நாட்களாக சாலையின் ஓரத்திலேயே அமர்ந்திருந்தார்.

சம்பவம் குறித்துப் பேசிய மஞ்சு, மழைநீரை வெளியேற்றுவதற்காக ஜெயசீலனை அழைத்ததன்பேரில், அவர் சென்றதாகக் கூறினார்.

"திங்கள் கிழமை அதிகாலை கனமழை பெய்து கொண்டிருந்தது. அப்போது காலை சுமார் 4 மணியளவில் அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் உடனே கட்டுமான தளத்திற்குச் செல்ல வேண்டும் எனக் கிளம்பினார். நான் அவரை அப்போதே தடுத்தேன்.

அவர், 'நான் இப்போது சென்று தண்ணீரை ஜெனரேட்டர் போட்டு வெளியேற்றாவிட்டால் ரூ 2.5 கோடி நஷ்டமாகிவிடும்' எனக் கூறிவிட்டு சென்றார். அதுதான் அவர் என்னிடம் பேசிய கடைசி வார்த்தைகள்," என்றார் மஞ்சு.

**நான்கு பேர் மீது வழக்கு; இருவர் கைது**

தனியார் கட்டுமான நிறுவனத்தின் உரிமையாளர் சிவக்குமார், கட்டுமானத் தள மேற்பார்வையாளர்கள் எழில், சந்தோஷ், மேலாளர் மணிகண்டன் ஆகியோர் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவு 304(i) (உயிரிழப்பு ஏற்படும் எனத் தெரிந்து அஜாக்கரதையாக பணியில் அமர்த்துதல்) கீழ் வழக்குப் பதிவு செய்து, எழில் மற்றும் சந்தோஷ் ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

மேலும், புயல் காரணமாக தமிழ்நாடு அரசு பொது விடுமுறை அறிவித்திருந்தும் பணிக்கு வரவழைத்த நிறுவனத்தின் மீது வருவாய்த்துறை மற்றும் மாநகராட்சி சார்பாகவும் தனியாக விசாரணை நடைபெற்று வருகிறது.

"காவல்துறையின் நடவடிக்கை ஒருபுறம் நடக்கிறது. அதேபோல, வருவாய்த்துறை மற்றும் உள்ளாட்சித்துறை சார்பாகவும் தனியாக இதுகுறித்து விரிவாக விசாரிக்கப்பட்டு வருகிறது. கட்டுமானத்தில் ஏதேனும் விதிமீறல் இருக்கிறதா என்பதையும் விசாரித்து வருகிறோம்," என்றார் சென்னை மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன்.

– பா.கார்த்திகேயன்

# கட்டணமின்றி சான்றிதழ் வழங்க முதல்வர் உத்தரவு!

மிக்ஜாம் புயல் மற்றும் பெருமழை வெள்ளம் காரணமாக தங்களது கல்வி சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு இலவசமாக சான்றிதழ் வழங்குவதற்கு சிறப்பு முகாம்களை நடத்த முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் மழை நீர் குடியிருப்புகளில் புகுந்து மக்களை அலைக்கழிப்பிற்கு உள்ளாகியது. இதன் காரணமாக மக்கள் தங்கள் உடைமைகளை அனைத்தையும் இழக்கும் நிலை ஏற்பட்டது. ஏராளமானோர், தங்கள் கல்விச் சான்றிதழ்களையும், அரசு வழங்கும் சான்றிதழ்களையும், மழை வெள்ளத்தில் இழந்துள்ளனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புயல் நிவாரணம் அறிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 6 ஆயிரம் வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் தொகை, பாதிக்கப்பட்டவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகளின் மூலம் ரொக்கமாக வழங்கப்பட இருக்கிறது.

இந்நிலையில் மழை வெள்ளத்தால் கல்வி சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு மீண்டும் இலவசமாக சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சிறப்பு முகாம்கள் நடத்தவும் முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதன் காரணமாக கல்வி சான்றிதழ்களை இழந்த மக்கள் தற்போது நிம்மதி அடைந்துள்ளனர்.

மிக்ஜாம் புயல், வெள்ள பாதிப்பினால் சேதமடைந்த அல்லது இழந்த அரசு சான்றிதழ்கள், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் பள்ளி-கல்லூரி சான்றிதழ்களை பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்குக் கட்டணமின்றி வழங்கிட சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்ய முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, இந்த 4 மாவட்டங்களிலும், சான்றிதழ்களை இழந்த மக்களுக்காக சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வருவாய் வட்டங்களில், சிறப்பு முகாம்கள் நடைபெறும்.

மேற்படி சிறப்பு முகாம்களில், பொதுமக்களின் வசதிக்கென, இ-சேவை மையங்களும் செயல்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

– உ.சரவணன்

கடவுளும் மனிதர்களை
காண இவ்வுலகில்
மனித வடிவில் வருவார்
என நம்பும் வகையில்,
புனித இயேசு பூவுலகில்
மனிதராக வந்த தினம்
டிசம்பர் திங்கள் 25-ம்
நாள்

# கிறிஸ்துமஸ்

## வாழ்த்துகளுடன்

**ராதிகா சிவசங்கர்**
ஆசிரியர் - பேனா குரல்

**சிவசங்கர்**
வெளியீட்டாளர்/உரிமையாளர்



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கார்களின் மதிப்பீடு என்ன?

சென்னையில் மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பல கார்கள் முழுமையாக மூழ்கின. ஒரு சில கார்கள் வெள்ள நீரில் இழுத்துச் செல்லப்பட்டதையும் காண முடிந்தது.

மழை நீர் வீட்டிற்குள் புகுந்ததால் வெளியே செல்ல முடியாத மக்கள் ஜன்னல் வெளியே தங்களது கார்கள் வெள்ளத்தில் மூழ்குவதையும் அடித்துச் செல்லப்படுவதையும் சோகத்தோடு பார்க்கும் சூழல் உருவானது. தாழ்வான பகுதிகளில் இருந்த வாகனங்கள் இந்த மழையில் பெரும் சேதத்தைச் சந்தித்துள்ளன.

இந்நிலையில், தங்களது வாகனங்களுக்கான காப்பீட்டை எப்படிப் பெறுவது என்பதில் மக்கள் மத்தியில் நிறைய கேள்விகள் எழுந்துள்ளன.

**கார்களுக்கு காப்பீட்டுத் தொகையைப் பெறுவது எப்படி?**

கார்களுக்கு காப்பீட்டுத் தொகையை எப்படிப் பெறுவது என்று விளக்கினார் ஹுண்டாய் இன்சூரன்ஸ் பிரிவின் அதிகாரி மணிவேல்.

இதுகுறித்து அவர் கூறுகையில், “புதிய வாகனம், தேய்மானத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட IDV (Insured Declared Value) என்று உறுதிப்படுத்தப்பட்ட காப்பீட்டு மதிப்பைப் பொறுத்து ஒவ்வொரு காருக்கும் பழுது நீக்கமும், பாகங்கள் மாற்றமும் வேறுபடலாம்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கார் இன்ஜினை ஸ்டார்ட் செய்தால் அதில் நீர் புகுந்துவிடும். உங்களது இன்சூரன்ஸ் பாலிசியில் இஞ்சின் புரொடக்சன் வாய்ப்பைக் கூடுதலாக சேர்த்திருந்தால் மட்டும்தான், அதற்கான காப்பீட்டில் தொகை கோர முடியும். இல்லாவிட்டால் முடியாது,” என அவர் தெரிவித்தார்.

மேலும், “கார் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டதை நீங்கள் அறிந்துவுடன் வாடிக்கையாளர் சேவை மையம் அல்லது காப்பீடு எடுத்த அலுவலகத்துக்கு அழைக்க வேண்டும்.

இதற்காக ஒவ்வொரு காப்பீடு நிறுவனமும் கட்டணமில்லா தொலைபேசி எண்களை அவர்களது அதிகாரப்பூர்வ இணையத்தில் கொடுத்திருப்பார்கள். மழை, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்ற காலங்களில், அதிகப்படியான காப்பீடு கோரல்கள் அவர்களுக்கு வரும் என்பதால் இணைப்பில் காத்திருக்கும் நேரம் அதிகமாக இருக்கலாம்,” என்று குறிப்பிட்டார்.

“ஒரு சில காப்பீடு நிறுவனங்கள் நகரில் ஆங்காங்கே முகாம்கள் நடத்தி, வாடிக்கையாளர்களிடம் தகவல்களைப் பெற்று உடனடியாக சர்வேயரை அணுக வழிகாட்டுகின்றனர். வாட்ஸ் ஆப், மின்னஞ்சல் போன்ற தகவல் பரிமாற்றங்களின் மூலமும் சில நிறுவனங்கள் உங்களுக்கு உதவக் காத்திருப்பதாக செய்தி அனுப்பலாம்.

ஒருவேளை உங்களுக்கு அழைப்பில் இணைப்பு கிடைக்க தாமதமாகிறது என்றால் நீங்கள் அவர்களுடைய அதிகாரப்பூர்வமான மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்பு கொண்டு காப்பீடு கோரலுக்கான முதற்கட்ட அறிவிப்பான இன்டிமேசனை கொடுக்கலாம்.

காரின் பாதிப்பு குறித்து காப்பீடு நிறுவனத்திற்குத் தெரிவிக்க காருடைய முன்பக்கம், பின் பக்கம், உள் பக்கம் எனப் பல கோணங்களில் புகைப்படம் எடுத்து மின்னஞ்சலில் இணைத்து தகவல் தெரிவிக்கலாம். இந்தப் புகைப்படமானது காப்பீடு கோரிக்கைக்கு மிகவும் அவசியமானது. அத்துடன் அந்தப் புகைப்படத்தில் உங்களது வாகனத்தின் பதிவெண் தெளிவாகத் தெரியும் படியாக புகைப்படம் எடுத்திருக்க வேண்டும்.

காப்பீடு கோரிக்கையை நிறுவனம் பெற்ற பிறகு,

காப்பீட்டிற்கான பதிவு எண் கொடுக்கப்படும். அதையடுத்து காரின் காப்பீடு பற்றிய தகவல்களை அறிய வேண்டுமெனில் அந்தப் பதிவு எண்ணைக் கொண்டு காப்பீடு கோரலின் நிலையைத் தெரிந்துகொள்ளலாம்," என்று மணிவேல் தெரி–வித்தார்.

**மழைநீர் புகுந்த கார்களில் பாதிப்பு எவ்வாறு மதிப்பிடப்படும்?**

காப்பீட்டு நிறுவனம் காரை பழுது பார்க்கும் நிலையத்திற்கு டோ செய்து எடுத்துச் செல்வதற்காக வாகனம் ஏற்பாடு செய்து தரக்கூடும் என்று விளக்கினார் காப்பீடு அதிகாரியான மணிவேல்.

"அதற்கு டோ செய்து வாகனத்தை மீட்பதையும் காப்பீடு போடும்போது சேர்த்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், அதற்கான பணமும் காப்பீட்டில் சேர்ந்தே கிடைக்கும்.

ஆகவே, காப்பீட்டிற்கான ப்ரீமியத்தில் அதற்கான பணத்தையும் செலுத்தி இருக்கிறீர்களா என்பதை உறுதி செய்து கொள்வது நல்லது. காப்பீடு கோரும்போது, அதற்கான படிவத்தை நிரப்பி, அதனுடன் வாகன ஓட்டுநர் உரிமம், காப்பீடு சான்றிதழ், பர்மிட் ஆகிய ஆவணங்களின் நகல்களையும் இணைத்து நிறுவனத்திடம் கொடுக்க வேண்டும். சமர்ப்பித்த ஆவணங்களின் அசலையும் காட்ட வேண்டியிருக்கும் என்பதால் அவற்றையும் தயாராக வைத்திருக்க வேண்டும்.

மேற்சொன்ன ஆவணங்கள் தொலைந்திருந்தால் காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்து சி.எஸ்.ஆர். பெற்று ஆவணம் பெற முயலலாம்," என்று தெரிவித்தார். இதைத் தொடர்ந்து காரை மதிப்பீடு செய்ய சர்வேயர் என்ற காப்பீடு அதிகாரி ஒருவரை நிறுவனம் அனுப்பும். அவர் உங்கள் வாகனம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை மதிப்பிடுவார்.

வாகனத்தின் பாதிப்பு எப்படிப்பட்டது, எந்தெந்த பாகங்களை மாற்ற வேண்டும், பழுது நீக்க வேண்டும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பவற்றை சர்வேயர் முடிவு செய்வார்.

அவரது மதிப்பீடு முடிந்த பிறகு, காப்பீடு கோரலின் நிலை பற்றிய விவரங்கள் அவ்வப்போது குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். அல்லது ஏற்கெனவே குறிப்பிட்டபடி மின்னஞ்சல் மூலமாகவோ கட்டணமில்லா தொலைபேசி எண்கள் மூலமாகவோ நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு காப்பீடு கோரலின் நிலையை அறிந்து கொள்ளலாம்.

எவ்வளவு தொகை கிடைக்கும்?

ஏற்கெனவே காப்பீட்டை எடுக்கும்போது ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட நிபந்தனைகளின்படி எந்தெந்த பாகங்களுக்கான காப்பீட்டுத் தொகை அந்த நிறுவனத்தால் வழங்கப்படும் என்பதை அவர் மீண்டும் உங்களுக்கு அறிவுறுத்துவார்.

அதுபோக காப்பீட்டில் வராத பாகங்களைச் சீர் செய்ய வேண்டியிருந்தால் அதை சரி செய்வதற்கு எவ்வளவு ஆகும் என்ற முன் கணிப்பையும் அவர் உங்களுக்கு ஒரு பட்டியலாகத் தருவார். இதற்கு நீங்கள் ஒப்புக்கொண்ட பின் உங்களுடைய கார் ரிப்பேர் செய்வதற்கான பணிகள் தொடங்கும்.

ஒருவேளை உங்களிடம் பணம் இல்லை என்றால் உங்கள் பணத்தில் ரிப்பேர் செய்யக்கூடிய பாகங்களை அவசியம் இருந்தால் மட்டுமே நீங்கள் மாற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்பைத் தேர்ந்தெடுக்கலாம். காரின் பாதுகாப்பான இயக்கத்தைப் பாதிக்காத, காப்பீட்டில் வராத பிற உதிரி பாகங்களை பின்னர்கூட மாற்றிக் கொள்ளலாம்.

பழுது பார்க்கும் பணிகள் முடிந்த பின்பு இன்சூரன்ஸ் நிறுவனம் பழுது நீக்க மையத்துக்கு பணத்தைக் கொடுத்து விடும். ஒருவேளை நீங்கள் வெள்ளத்தில் சிக்கிய காரை தவறுதலாக இன்ஜின் ஸ்டார்ட் செய்து அது ஹைட்ரோ லாக் ஆகி இருந்தால் உங்கள் கார் ரிப்பேர் செய்ய முடியாத ஒன்றாக மாறிவிடும்.

அப்படி ஆகியிருந்தால், காரின் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டும், உறுதி செய்யப்பட்ட காப்பீடு மதிப்பு என்ற மிஞ்சிய மதிப்பைப் பொருத்தும் கார் ஸ்கிராப் என்னும் மறுசுழற்சிக்கோ, உடைத்துப் போட்டு உதிரி பாகங்கள் பிரிக்கும் பணிக்கோ அனுப்பப்படலாம்.

இதையடுத்து உங்களுக்கு எவ்வளவு தொகை வழங்கப்படும் என்பதை காப்பீடு நிறுவனம் தகவல் தெரிவிக்கும். இறுதியாக உங்கள் இரு தரப்பால் ஒப்புக்கொண்ட மதிப்பீட்டுக்கான பணம் உங்களுக்கு காப்பீடு நிறுவனத்தால் கொடுக்கப்படும்.

ஒருவேளை உங்களது வாகனமானது கடனிலோ அல்லது ஒப்பந்தத்திலோ இருந்தால் அதற்கான பணம் உரியவருக்குச் செல்லும். வாகனம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தால், நீங்கள் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தில் புகாரளித்து முதல் தகவல் அறிக்கை பெற வேண்டும்.

குறிப்பிட்ட மாதங்கள் வரை அந்த வாகனம் கண்டுபிடிக்க முடியாது இருந்தால், காணாமல் போய்விட்டதாகவும், கண்டறிய முடியாத வாகனம் என்றும் காவல்துறை ஒரு சான்று அளிக்கும். அசல் சாவியைக் கொடுத்து, ஆர்டிஓ தகவல் கொடுத்த அத்தாட்சி ஆவணம், இன்ன பிற ஆவணங்களைக் கொடுக்க வேண்டி வரும்.

அவை சரியாக இருந்தால், திருடுபோன காருக்கான மிஞ்சிய மதிப்பைப் பொறுத்து உங்களுக்கு காப்பீடு நிறுவனம் பணம் கொடுக்கலாம். பாதிப்பின் அளவு மற்றும் கார் தயாரித்த வருடத்தைப் பொறுத்து இழப்பீடு கணிக்கிடப்படும்.

**காப்பீட்டின் வகைகள் என்னென்ன?**

நில் டெப்ரிசியேசன் எனப்படுவது எதிர்பாராத விதமாக நடக்கக்கூடிய சாலை விபத்துக்கு 100 சதவீதம் காப்பீடு செய்துகொள்வது. இதை பம்பர் டூ பம்பர் எனக் கூறுவார்கள்.

ஓன் டேமேஜ் எனப்படுவது, நாமே வாகனத்தை இயக்கும்போது குழியில் விட்டுவிடுவது, கல்லில் மோதிவிடுவது ஆகியவற்றைக் குறிக்கும்.

மூன்றாம் நபர் காப்பீடு என்பது நமது வாகனத்தால் தவறுதலாக யார் மீதேனும் மோதினால் அவர்களுக்கான மருத்துவச் செலவையும், உயிரிழப்பு இழப்பீடும் பெறுவது. பெரும்பாலும் புதியதாக வாகனம் வாங்கிப் பதிவு செய்யும்போதே 3 ஆண்டுகளுக்கு மூன்றாம் நபர் காப்பீட்டுக்கான பணத்தை விற்பனை நிறுவனங்களே பெற்று காப்பீடு வாங்கித் தந்துவிடும்.

நட்டு, போல்டு, வயர், எலியால் சேதமான வயர் பாகங்கள் போன்றவற்றுக்கான கன்ஸ்யூமபிள்ஸ் என்ற காப்பீட்டைக் கூடுதலாக போட்டிருந்தால் மட்டுமே காப்பீட்டுத் தொகை கிடைக்கும். இஞ்சின் புரொடக்சன் என்பது, இஞ்சினுக்குள்

தண்ணீர் புகுந்திருந்தால் 100 சதவீதம் காப்பீடு செய்து கொள்ளலாம்.

ஆ.டி.ஐ என்ற காப்பீடானது ரிட்டன் டு இன்வாய்ஸ் எனப்படும். இது, கார் தொலைந்து போனாலோ, எரிந்து போனாலோ புதியதாக கார் வாங்கியபோது செலுத்திய எக்ஸ் ஷோரூம் விலையை (சாலை வரி உள்பட) திரும்பக் கிடைத்துவிடும்.


கீ புரொடக்சன் என்பது, சாவி தொலைந்துவிட்டால், சிஎஸ்ஆர் என்ற காவல்நிலைய புகார் நகல் கொடுத்த பின்பு, கிடைக்கும் காப்பீடு.

பர்சனல் பிலாங்கிங் காப்பீடானது விபத்தின்போதோ, திருட்டின் போதோ காருக்குள் வைத்திருந்த பொருட்கள் திருடுபோயிருந்தால், அதற்கான பணமும் கிடைக்கும்.

வெள்ளத்தில் பாதித்த வாகனங்களைப் பொறுத்தவரை, உங்களுடைய காப்பீட்டின் மிஞ்சுஷி மதிப்புக்கும் மேல் செலவாகும் எனத் தெரிந்துவிட்டால், அந்த வாகனத்தை காப்பீடு நிறுவனம் டோடல் லாஸ் எனக் கூறிவிடலாம்.

**வெள்ள பாதிப்பு கார் மதிப்பீட்டின் வகைகள்**

பொதுவாக வெள்ளத்தில் பாதித்த கார்களை நான்கு வகைகளாகப் பிரிப்பார்கள் எனக் கூறினார் வாகனக் காப்பீட்டுத் துறையில் 10 ஆண்டுகளாகப் பணியாற்றும் ராஜேஷ்.




Rank of vehicles based on level of water

இதுகுறித்து விளக்கிய ராஜேஷ், வெள்ளம் பாதித்த கார்களை ABCD என பிரிப்பார்கள், என்றார்.

A பிரிவில் சேர்க்கப்பட்ட கார்கள், முழுவதுமாக நீரில் மூழ்கியிருக்கும்.

B பிரிவில் சேர்க்கப்பட்ட கார்கள் இருக்கைக்கு மேல் வரை தண்ணீர் தேங்கியவையாக இருக்கும்.

C ரக கார்கள் இருக்கை தொடங்கும் இடம் வரை தண்ணீர் தேங்கியிருக்கலாம்.

D ரக கார்கள் காரின் மேட் என்ற விரிப்பு வரை மட்டும் தண்ணீர் தேங்கியவையாக இருக்கும்.

இதில் பொதுவாக A மற்றும் B ரகத்தினல் உள்ளவற்றில் இஞ்சினுக்குள் தண்ணீர் சென்றிருந்தால் அது டோடல் லாஸ் எனக் கணக்கிடப்படும்," என்றார். அத்துடன் ஆ.டி.ஐ இன்சூரன்ஸ் எடுப்பதன் அவசியத்தையும் ராஜேஷ் வலியுறுத்தினார்.

"என்னுடைய நண்பர் வாங்கிய விலையுயர்ந்த பி.எம். டபுள்யூ சொகுசு கார் ஓராண்டில் வெள்ளத்தில் சிக்கி முழுமையாக மூழ்கியது. அவர் ஆர்டிஐ காப்பீட்டைக் கூடுதலாகத் தேர்வு செய்திருந்ததால் அவருக்கு புதிய காரையே வழங்க நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

சில நிறுவனங்கள் இன்சூரன்ஸ் பிரீமியத்துக்கான பணத்தையும், நடப்பு ஆண்டுக்கான எக்ஸ் ஷோரூம் விலையையும் சேர்த்தே திருப்பித் தருகின்றன. சாதாரண கார்களுக்கு ஆர்டிஐ வாய்ப்பைத் தேர்வு செய்ய வழக்கமான பிரீமியத்தைவிட கூடுதலாக 5,000 முதல் 8,000 ரூபாய்வரை ஆகலாம்.

ஆனால், இதுபோன்ற சமயங்களில் அது மிகவும் பலனாக உள்ளது. ஆர்டிஐ வாய்ப்பைத் தேர்ந்தெடுக்க 3 ஆண்டுகள்கூட அவகாசம் உள்ளது. ஏற்கெனவே குறைந்த IDV மதிப்பு கொண்ட காப்பீட்டை எடுத்த நபர், அதை அதிகரிக்க விரும்பினாலோ, கூடுதலாக இஞ்சின் புரொடக்சன், ஆர்டிஐ சேர்க்க விரும்பினாலோ, காரை ஆய்வு செய்த பின் காப்பீட்டு நிறுவனம் அந்த வாய்ப்பை வழங்கும்," என்றும் ராஜேஷ் தெளிவுபடுத்தினார்.

**பேரிடர் சார்ந்த பிற காப்பீடுகள் என்னென்ன?**

இதேபோல வீடு, குடோன், தொழிற்சாலை, விவசாயம் உள்ளிட்ட பல வகையான சொத்துகளுக்கும் தொழில்களுக்கும் அதற்குள் இருக்கும் அறைகலன்கள், பணம், நகை, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், மூலப்பொருட்கள், குடோனில் வைக்கப்பட்டுள்ள இருப்பு என அனைத்து வகையான பொருட்களுக்கும் சேர்த்து பிராப்பர்ட்டி இன்சூரன்ஸ் என்ற பெயரில் சொத்துக் காப்பீடு எடுக்க முடியும் எனக் கூறியுள்ளார் இஃப்கோ டோக்கியோ காப்பீட்டு நிறுவனத்தில் டிவிசனல் பொது மேலாளராகப் பணியாற்றும் முரளி ராஜன்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "இயற்கை சீற்றங்களான சூறாவளி, புயல், மழை, வெள்ளம், நிலநடுக்கம், தீ விபத்து போன்றவற்றால் வீட்டிலும் தொழிற்சாலையிலும் இருக்கும் பொருட்கள் ஏதேனும் சேதமானாலோ வீடு இடிந்துவிட்டாலோ அதற்கு இழப்பீடு பெற்று மீண்டும் ஒரு மறுவாழ்வைக் கட்டமைத்துக்கொள்ள இந்த வகையான காப்பீடுகள் உதவுகின்றன.

சுமார் 40 லட்சம் ரூபாய்க்கு வீடு உள்ள ஒரு நடுத்தர குடும்பத்தினர் அதற்குள் சுமார் 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள பணம், நகை, வீட்டு உபயோகப் பொருட்கள் ஆகியவற்றை வைத்திருப்பார்கள் என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் ஆண்டுக்குத் தோராயமாக ₹5,000 மட்டும் பிரீமியம் செலுத்தினால் ₹50 லட்சத்துக்கு இந்த இன்ஷூரன்ஸ் எடுக்க முடியும்," எனக் கூறினார் இஃப்கோ டோக்யோவில் உள்ள முரளி ராஜன்.

மேலும், ஏராளமான கார்களை ஷோரூமுக்கு பின்புறம் நிறுத்தி வைத்திருக்கும் கார் ஷோ ரூம் நிறுவனங்களும் வெள்ளத்தில் தங்களது புதிய கார்களை இழந்ததால், இழப்பீட்டுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் அடிக்கடி புயல், மழை, வெள்ளம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படும் எனில் அந்தப் பகுதிகளில் சொத்துகளை வைத்திருப்போர் இதுபோன்ற காப்பீட்டை எடுத்து பலன் பெறலாம். இதுபோன்று பல்வேறு நிறுவனங்களும் காப்பீடுகளை வழங்கி வருகின்றன.

**- வீ.அய்யனார்**

# பரம்பிக்குளம் அடர் வனப்பகுதிக்குள் கன்னி மரம்!



உலகின் பழமையான தேக்கு மரமாக கருதப்படும் கன்னிமாரா தேக்கு பரம்பிக்குளத்தில் உள்ளது. இந்த மரம் கிட்டத்தட்ட 450 ஆண்டுகள் பழமையானது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.


1902 ஆம் ஆண்டு வாக்கில் இந்தியாவை ஆட்சி செய்த பிரிட்டிஷார் பரம்பிக்குளம் வனப்பகுதிக்குள் இயற்கையாக உருவாகிக் கிடந்த தேக்கு மரங்களை வெட்டி கொச்சின் வழியாக வெளிநாட்டிற்கு கடத்தும் போது இந்த மரத்தை வெட்டுகையில் இதிலிருந்து ரத்தம் வழிந்ததாகவும் அதைக் கண்டு பயந்து அவர்கள் இந்த மரத்தை அப்படியே விட்டுவிட்டு சென்றுவிட்டதாகவும் கர்ண பரம்பரை கதைகள் உலவுகின்றன. அதன் அடிப்படையிலேயே இது கன்னி மரம் என அழைக்கப்படுகிறது.

உலகின் மிகப் பழைமையான இயற்கை மரங்களுள் இதுவும் ஒன்று. இன்றும் இதில் இளமையான இலைகள் வளர்கின்றன.பழுத்த இலைகளைக் காண்பது அரிது.

சுற்றுலாப் பயணிகள் வயது காரணமாக மட்டுமல்ல, அதன் அளவு காரணமாகவும் ஈர்க்கப்படுகிறார்கள். 49.5 மீட்டருக்கு மேல் உயர்ந்து, வியக்க வைக்கும் வகையில் 6.8 மீட்டர் சுற்றளவு கொண்டது. தாத்தா மரத்தின் படங்களைப் பார்க்கவும், படம் பிடிக்கவும் சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வருகிறார்கள். அதன் தனித்துவத்தை உணர்ந்த இந்திய அரசு, அதற்கு மகாவிருட்ச புரஸ்கார் என்ற பட்டத்தை வழங்கியது.

நீங்கள் கேரளாவில் இருந்தால், குறிப்பாக பாலக்காடு மாவட்டத்தில் இருந்தால், இந்த தேக்கு உங்கள் பயணத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். இது பரம்பிக்குளம் வனவிலங்கு சரணாலயத்திற்குள் இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் முழு நிலப்பரப்பின் மகத்துவத்தையும் பார்க்க முடியும். புலிகள் காப்பகத்திற்குள் நீங்கள் மலையேற்றங்கள் மற்றும் சஃபாரி சவாரிகளுக்கு செல்லலாம்.




சரணாலயம் வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும் மற்றும் பார்வையிட வேண்டிய நேரம் காலை 7 முதல் மாலை 6 மணி வரை. நீங்கள் செல்லும் வாகனங்களைப் பொறுத்து நுழைவுக் கட்டணம் ரூ.25/- முதல் ரூ.150/- வரை இருக்கும். உள்ளே சென்றதும், தேக்கு மரம், மலையேற்றம், காடு முகாம்கள், மூங்கில் ராஃப்டிங் பயணங்கள் ஆகியவற்றை நீங்கள் பார்வையிடலாம், மேலும் ஒரு வழிகாட்டி கூட இந்த சுற்றுச்சூழல் அமைப்பில் இருக்கும் இயற்கை மற்றும் வனவிலங்குகளைப் பற்றி உங்களுக்குக் கற்பிப்பார்.

**- பா.சரவணன்**




# ஒரே பாரதம் உன்னத பாரதம்

## கொள்கைக்கு வலுசேர்த்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு

அரசியல் சட்டப்பிரிவு 370 மற்றும் 35 (ஏ) ரத்து செய்யப்பட்டது குறித்து வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை உச்சநீதிமன்றம் டிசம்பர் 11 அன்று வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பின் மூலம் ஒவ்வொரு இந்தியராலும் போற்றப்படும் இந்தியாவில் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் நீதிமன்றம் நிலைநாட்டியுள்ளது. 2019 ஆகஸ்ட் 5 அன்று மேற்கொள்ளப்பட்ட முடிவு அரசியல் சட்டப்படியான ஒருமைப்பாட்டை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்டதே அல்லாமல், ஒருமைப்பாட்டை சிதைக்கும் நோக்கம் கொண்டதல்ல என்று உச்சநீதிமன்றம் தெளிவாகவே கூறியுள்ளது. 370-வது பிரிவு, நிரந்தர தன்மை கொண்டதல்ல என்ற உண்மையையும் நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.

ஜம்மு, காஷ்மீர் மற்றும் லடாக்கின் பரந்த நிலப்பரப்பும், அமைதியான பள்ளத்தாக்குகளும், கம்பீரமான மலைகளும், கவிஞர்கள், கலைஞர்கள், சாகச வீரர்கள் ஆகியோரின் இதயங்களில் பல தலைமுறைகளாக இடம்பெற்றுள்ளன. இந்த பூமி அசாதாரணமான அம்சங்களைக் கொண்டுள்ளது. இங்குள்ள இமயமலை வானத்தைத் தொட்டு நிற்கிறது. இங்குள்ள ஏரிகள் மற்றும் நதிகளின் நீர்ப்பரப்பு சொர்க்கத்தைப் பிரதிபலிக்கின்றன. ஆனால், கடந்த 70 ஆண்டுகளாக இந்த இடங்கள், சிறப்புமிக்க மக்களுக்கு சற்றும் பொருத்தமில்லாத மோசமான வன்முறை மற்றும் நிலையற்ற தன்மையைக் கொண்டிருந்தன.

துரதிர்ஷ்டவசமாக நூற்றாண்டு கால காலனி மயம், பொருளாதார மற்றும் மனம் சார்ந்த அடிமைத்தனம் காரணமாக இது பலவகையான குழப்பம் மிக்க சமூகமாக மாறியது. மிக அடிப்படையான விஷயங்களில் தெளிவான நிலையை எடுப்பதற்கு மாறாக, இரட்டை நிலையை நாம் அனுமதித்தது குழப்பத்திற்கு வழிவகுத்தது. இத்தகைய மனநிலைக்கு மிகப்பெரிய பலியிடமாக ஜம்மு, காஷ்மீர் மாறியது சோகமாகும். நாடு சுதந்திரமடைந்த காலத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்கான புதிய தொடக்கத்தை ஏற்படுத்த நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. இதற்கு பதிலாக குழப்பமான சமூக அணுகுமுறை என்பதை தொடர நாம் முடிவு செய்ததால், நீண்ட கால தேசிய நலன்கள் புறக்கணிக்கப்பட்டன.

எனது வாழ்க்கையின் தொடக்கக் காலத்தில் இருந்து ஜம்மு, காஷ்மீர் மக்கள் இயக்கத்துடன் தொடர்புகொள்ளும் வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். ஜம்மு, காஷ்மீர் கட்டமைப்பு குறித்து நான் சார்ந்திருக்கும் சித்தாந்தம் என்பது வெறுமனே ஓர் அரசியல் விஷயம் அல்ல. அது சமூகத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவது பற்றியது. நேரு அமைச்சரவையில் முக்கியமான பொறுப்பு வகித்த டாக்டர் ஷியாமா பிரசாத் முகர்ஜி, நீண்ட காலத்திற்கு அரசில் நீடித்திருக்க முடியும். இருப்பினும், காஷ்மீர் பிரச்சனையில் அவர் அமைச்சரவையில் இருந்து விலகினார். தனது வாழ்க்கையை இழக்க நேரிடும் என்றபோதும், கடுமையான பாதையை அவர் தெரிவு செய்தார். அவரது முயற்சிகளும், தியாகமும், காஷ்மீர் பிரச்சனையுடன் கோடிக்கணக்கான இந்தியர்களை உணர்வு பூர்வமாக இணைப்பதற்கு வழிவகுத்தன. சில ஆண்டுகளுக்குப் பின், ஸ்ரீநகரில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் அடல் பிகாரி வாஜ்-பாய் அவர்கள், சக்திமிக்க முழக்கத்தை முன்வைத்தார்.

'மனிதநேயம்,' 'ஜனநாயகம்', 'காஷ்மீரியம்,' என்ற அந்த முழக்கம் மகத்தான ஊக்கசக்தியாக இருக்கிறது.

ஜம்மு, காஷ்மீரில் நடந்தது நமது தேசத்திற்கும், அங்கு வாழும் மக்களுக்கும் மிகப்பெரிய துரோகம் என்பது எப்போதும் எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். இந்த கறையை, மக்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியை அகற்ற, என்னால் முடிந்ததை செய்ய வேண்டும் என்பது எனது வலுவான விருப்பமாக இருந்தது. ஜம்மு, காஷ்மீர் மக்களின் துயரங்களைப் போக்க பாடுபடவேண்டும் என்று நான் எப்போதும் விரும்புகிறேன்.

பிரிவுகள் 370, 35 (ஏ) ஆகிய சொற்கள் இதற்கு மிகப்பெரும் தடைகளாக இருந்தன. இது தகர்க்க முடியாத சுவர் போல தோன்றியது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகளும், அடித்தள மக்களும் தான். இந்தியாவில் உள்ள மற்ற குடிமக்கள் பெறுகின்ற உரிமைகளையும், வளர்ச்சியையும் ஜம்மு, காஷ்மீர் மக்கள் பெறமுடியதாக நிலையை பிரிவுகள் 370, 35 (ஏ) ஆகியவை ஏற்படுத்தின. இந்தப் பிரிவுகள் காரணமாக ஒரே தேசத்தின் மக்களிடையே பாகுபாடுகள் ஏற்பட்டன. இதன் காரணமாக, அங்குள்ள மக்களின் வலிகளைத் தெளிவாக தெரிந்திருந்தாலும், பிரச்சனைகளுக்கு தீர்வு காண பணியாற்ற விரும்பினாலும், தேசத்தின் மக்கள் அதனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

பல பத்தாண்டுகளாக இந்தப்பிரச்சனை குறித்து நெருக்கமாக அறிந்திருக்கும் ஒரு செயற்பாட்டாளன் என்ற முறையில், இதன் தனித்தன்மைகளையும், சிக்கல்களையும் நுணுக்கமாக அறிந்திருந்தேன். மேலும் ஜம்மு, காஷ்மீர் மக்கள் வளர்ச்சியை விரும்புகிறார்கள், தங்களின் வலிமை மற்றும் திறன்கள் மூலம் இந்தியாவின் வளர்ச்சிக்குப் பங்களிக்க விரும்புகிறார்கள் என்பதில் நான் மிகத் தெளிவாக இருந்தேன். இவர்கள் தங்கள் குழந்தைகளின் தரமான வாழ்க்கையை விரும்புவதோடு, வன்முறை மற்றும் நிலையற்ற தன்மையில் இருந்து விடுபடவும், விரும்புகிறார்கள்.

இந்த அடிப்படையில், ஜம்மு, காஷ்மீர் மக்களுக்கான சேவையில், மக்களின் கவலைகளைப் புரிந்துகொள்வது, ஆதரவான செயல்பாடுகள் மூலம் நம்பிக்கையை ஏற்படுத்துவது, வளர்ச்சிக்கு முன்னுரிமை, கூடுதல் வளர்ச்சி என்ற மூன்று அம்சங்களுக்கு நாங்கள் முன்னுரிமை அளித்தோம்.

2014-ம் ஆண்டில் நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த சிறிது காலத்திலேயே ஜம்மு, காஷ்மீரைத் தாக்கிய பெருவெள்ளம், காஷ்மீர் பள்ளத்தாக்கில் கடுமையான சேதத்தை விளைவித்தது. 2014, செப்டம்பரில் நிலமையை மதிப்பீடு செய்ய நான் ஸ்ரீநகர் சென்ற போது, மறுவாழ்வுக்கு ரூ.1000 கோடி சிறப்பு நிதியுதவி அறிவிக்கப்பட்டது. இது நெருக்கடியான காலத்தில் மக்களுக்கு உதவுகின்ற அரசின் உறுதிப்பாட்டுக்கு அடையாளமாக விளங்கியது. இந்த சமயத்தில், பலதரப்பு மக்களை சந்திக்கும் வாய்ப்பை நான் பெற்றேன். இவர்களுடனான கலந்துரையாடலில் ஒரு பொதுத்தன்மை இருப்பதை நான் கவனித்தேன். இந்த மக்கள், வளர்ச்சியை மட்டும் விரும்பவில்லை. கடந்த பல பத்தாண்டுகளாக பரவலாக நிலவுகின்ற ஊழலில் இருந்தும் விடுபட வேண்டும் என்று விரும்பினார்கள். ஜம்மு, காஷ்மீரில் ஏற்பட்ட இழப்பை நினைவுகூரும் வகையில், அந்த ஆண்டு தீபாவளியைக் கொண்டாடுவதில்லை என்று நான் முடிவு செய்தேன். தீபாவளி தினத்தன்று காஷ்மீரில் இருப்பது என்றும் முடிவு செய்தேன்.

ஜம்மு, காஷ்மீரின் வளர்ச்சிப் பயணத்தை மேலும் வலுப்படுத்த எங்கள் அரசின் அமைச்சர்கள் அங்கு தொடர்ந்து பயணம் மேற்கொள்வது என்றும் மக்களுடன் நேரடியாக கலந்துரையாடுவது என்றும் நாங்கள் முடிவு செய்தோம். இத்தகைய பயணங்களும் ஜம்மு, காஷ்மீரில் நல்லெண்ணத்தை கட்டமைப்பதில் முக்கியப் பங்கு வகித்தன. 2014 மே மாதம் தொடங்கி 2019 மார்ச் மாதம் வரை 150 முறை அமைச்சர்களின் பயணம் அமைந்திருந்தது. இது ஒரு சாதனை அளவாகும். ஜம்மு, காஷ்மீரின் வளர்ச்சித் தேவைகளை நிறைவேற்றும் முக்கிய நடவடிக்கையாக 2015-ல் சிறப்புத்திட்டம் அறிவிக்கப்பட்டது. இது அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு, வேலை உருவாக்கம், சுற்றுலா மேம்பாடு, கைவினை தொழில் துறைக்கு ஆதரவு என்ற முன்முயற்சிகளைக் கொண்டிருந்தது.

ஜம்மு, காஷ்மீரில் விளையாட்டுத் திறனின் வலிமையை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடிவெடுத்தோம். ஏன்னென்றால், இளைஞர்களின் கனவுகளை தூண்டுவதற்கான ஆற்றலை அதில் இருப்பதை நாங்கள் உணர்ந்தோம்.. விளையாட்டு முன்முயற்சிகள் மூலம் விளையாட்டு வீரர்களின் விருப்பங்களிலும், எதிர்காலத்திலும் ஒரு மாற்றத்தை நாங்கள் கண்டோம். விளையாட்டுத் தளங்கள் மேம்படுத்தப்பட்டன. பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பயிற்சியாளர்கள் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டது. உள்ளூர் கால்பந்து மன்றங்களை அமைப்பதை ஊக்குவித்தது மிகவும் தனித்துவமான விஷயங்களில் ஒன்றாக இருந்தது. இதன் விளைவு, அசாதாரமானது. திறமைமிக்க கால்பந்து வீராங்கனை அஃப்ஷன் ஆஷிக் பெயர் எனது நினைவுக்கு வருகிறது. 2014, டிசம்பரில் இவர் ஸ்ரீ நகரில் கல்லெறியும் கும்பலில் ஒருவராக இருந்தார். சரியான ஊக்குவிப்பு காரணமாக கால்பந்து விளையாட்டில் கவனத்தை திருப்பினார். பயிற்சிக்கு அனுப்பப்பட்ட இவர், அந்த விளையாட்டில் அதீத திறமைப் பெற்றார். உடல் தகுதி இந்தியா, உரையாடல்கள் ஒன்றில் அவருடன் நான் உரையாடியதை நினைவுகூர்கிறேன். அப்போது புகழ்பெற்ற காலபந்து வீரர் பெக்காமைப் போல வளைத்து ஆடு என்ற சொற்றொபாலிருந்து இனி

ஆஃப்ஷான் போல பந்தைக் கடத்து என்ற சொற்றொடருக்கு மாற வேண்டிய தருணம் வந்து விட்டது என்று கூறினேன்.

மற்ற சில இளைஞர்களும் குத்துச்சண்டை, கராத்தே மற்றும் பலவற்றில் மிளிரத் தொடங்கினார்கள்.

இந்தப் பிராந்தியத்தின் அனைத்து வகையான வளர்ச்சித் தேடலுக்கு திருப்பு முனையாக உள்ளாட்சித் தேர்தல்கள் அமைந்தன. மீண்டும் ஒரு முறை எதைத் தெரிவு செய்வது என்ற இக்கட்டான நிலையை நாங்கள் எதிர்கொண்டோம். அது அதிகாரத்தில் நீடிப்பதா அல்லது கொள்கைளில் இறுதியாக நிற்பதா என்பது தான். இதற்கானத் தெரிவு கடுமையானதாக இல்லை. அரசில் இருந்து வெளியேறினாலும், ஜம்மு, காஷ்மீர் மக்களின் விருப்பங்களுக்கு முன்னுரிமை அளிப்பது என்ற கோட்பாட்டை உறுதியாக பற்றி நிற்பது என்பதைத் தெரிவு செய்தோம். பஞ்சாயத்து தேர்தல்களின் வெற்றி ஜம்மு, காஷ்மீர மக்களின் ஜனநாயகத் தன்மையை வெளிப் படுத்தியது. ஊராட்சித் தலைவர்களுடன் நான் கலந்துரையா டியது எனது நினைவுக்கு வருகிறது. அப்போது, எந்த இடத்திலும் பள்ளிகள் எரிக்கப்படக்கூடாது என்பதை உறுதி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அவர்களிடம் நான் முன் வைத்தேன். இது ஏற்றுக்கொள்ளப்பட்டது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைந்தேன். பள்ளிகள் எரிக்கப்பட்டால், மிகப் பெரும் பாதிப்புக்கு உள்ளாவோர் சிறு குழந்தைகள் தான்.

வரலாற்று சிறப்புமிக்க ஆகஸ்ட் 5-ம் தேதி இந்தியர் ஒவ்வொருவர் மனதிலும் பசுமரத்தாணி போல பதிந்திருக்கிறது. சட்டப்பிரிவு 370-ஐ ரத்து செய்யும் சரித்திரம் முக்கியத்துவம் வாய்ந்த முடிவை நமது நாடாளுமன்றம் நிறைவேற்றியது. அதிலிருந்து ஜம்மு, காஷ்மீர் மற்றும் லடாக்கில் பல வியக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. நீதிமன்றத்தின் தீர்ப்பு 2023 டிசம்பரில் வந்துள்ளது. ஆனால் ஜம்மு, காஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் அணிவகுப்பைக் கண்டுள்ளன. 4 வருடத்திற்கு முன்பு சட்டப்பிரிவு 370 மற்றும் 35(கி) ஆகிய பிரிவுகளை நாடாளுமன்றத்தில் ரத்து செய்யும் முடிவு எடுக்கப்பட்ட போது மக்கள் மன்றம் மிகப்பெரிய வரவேற்பை அளித்தது.

கடந்த நான்கு ஆண்டுகளில் அரசியல் நிலைப்பாட்டில் ஜனநாயகத்தின் வேர்களில் ஒரு புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடி-யினர் மற்றும் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் தங்களுக்கான பலன்களைப் பெறவில்லை. அதே போல லடாக் மக்களின் விருப்பங்களும் முழுவதுமாக புறக்கணிக்கப்பட்டன. இவை அனைத்தையும் 2019-ம் ஆண்டு ஆகஸ்ட் 5-ந் தேதி மாற்றியது. அனைத்து மத்திய சட்டங்களும் இப்போது எந்தவித தயக்கமும், பாரபட்சமும் இன்றி அமல்படுத்தப்படுகின்றன. பிரதிநிதித்துவமும் பரவலாக்கப்பட்டுள்ளது - மூன்றடுக்கு பஞ்சாயத்துராஜ் முறை அமலில் இருக்கிறது. வட்டார வளர்ச்சி கவுன்சில் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. அனைவராலும் மறக்கப்பட்ட அகதி சமூகத்தினர் வளர்ச்சியின் பலனை அனுபவிக்க தொடங்கியிருக்கின்றனர்.

முக்கியமான மத்திய அரசின் திட்டங்கள் கிட்டதட்ட முழுமையடையும் கட்டத்தில் உள்ளதால். சமூகத்தின் அனைத்துப்பிரிவு மக்களும் இவற்றால் பயனடைந்துள்ளனர். இவற்றில் கிராமங்களில் 100 சதவீத மின்வசதியை உறுதி செய்யும் சௌபாக்யா, இலவச சமையல் எரிவாயு இணைப்பை வழங்கும் உஜ்வாலா மற்றும் எல்இடி மின்விளக்குகளை சலுகை விலையில் வழங்கும் உஜாலா திட்டங்கள் அடங்கும். வீட்டுவசதி திட்டங்கள், குழாய் மூலம் குடிநீர் இணைப்பு, அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டது. மக்களுக்கு மிகப் பெரும் சவாலாக இருந்த சுகாதார வசதிக்கான அடிப்படைக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து கிராமங்களும் திறந்தவெளியில் மலம் கழிக்காத நிலையை அடைந்தன. அரசுப் பணியிடங்களை நிரப்புவதில் ஊழலும் ஒரு தலைப்பட்சமும் இருந்த நிலை-யிலிருந்து மாறுபட்டு வெளிப்படைத்தன்மையோடும் முறையான நடைமுறைகளோடும் நிரப்பப்பட்டன. சிசு இறப்பு விகிதம் போன்ற இதர விஷயங்களில் முன்னேற்றம் ஏற்பட்டது. அடிப்படை உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அனைவருக்கும் கண்கூடானது. இதற்கான பெருமை இயல்பாகவே ஜம்மு காஷ்மீர் மக்களின் மனஉறுதிக்கு உரியது. இவர்கள் வளர்ச்சியை மட்டுமே விரும்புகிறார்கள் என்பதையும், ஆக்கப்பூர்வமான மாற்றத்தின் சக்திகளாக இருக்கவே விரும்புகிறார்கள் என்பதையும் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளனர். ஏற்கனவே ஜம்மு, காஷ்மீர், லடாக் ஆகியவற்றின் அந்தஸ்து ஒரு கேள்விக்குறியாக இருந்தது. இப்போது வளர்ச்சி, முன்னேற்றம் சுற்றுலாப்பயணிகளின் வருகை ஆகியவற்றில் வியத்தகு சாதனை நிகழ்ந்துள்ளது.

உச்சநீதிமன்றத்தின் டிசம்பர் 11-ந் தேதி தீர்ப்பு ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற உணர்வை வலுப்படுத்தியுள்ளது. ஒற்றுமையின் பிணைப்புகள், நல்லாட்சிக்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்பு ஆகியவற்றை இது வரையறுத்துள்ளது. இப்போது ஜம்மு, காஷ்மீர், லடாக்கில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், ஓவியம் தீட்டுவதற்கான தூய்மையான சித்திர துணியைப் போல பிறக்கின்றன. அப்படிப் பிறக்கும் ஆண் அல்லது பெண் குழந்தைகள் தான் தங்களின் துடிப்பான எதிர்கால விருப்பங்களை அதில் வண்ண ஓவியங்களாக தீட்ட இயலும். இப்போது மக்களின் கனவுகள் கடந்த காலத்தின் சிறைகளாக இல்லாமல் எதிர்காலத்தின் சாத்தியங்களாக இருக்கின்றன. அனைத்துக்கும் மேலாக அதிருப்தி, ஏமாற்றம், விரக்தி ஆகியவற்றிற்கு மாற்றாக வளர்ச்சி, ஜனநாயகம், கண்ணியம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

**- சரவணன் @ மணிகண்டன்**

# கல்வி, வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்கு தமிழக அரசின் அதிரடி திட்டம்!

அயல்நாடுகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக செல்லும் தமிழர்கள் நலன் கருதி, 7 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்க பயிற்சி மையங்கள் அமைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

வேலை வாய்ப்பிற்காக தமிழ்நாட்டில் இருந்து வெளிநாடு செல்லும் பலர், தாங்கள் செல்லும் நாட்டின் சட்டத்திட்டங்கள், கலாசாரம், மொழி உள்ளிட்டவை குறித்து அறிந்து கொள்ளும் வகையில் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு அடிப்படை கல்வி தகுதி, ஆவணங்கள் தொடர்பான தெளிவு, ஆங்கிலம் மற்றும் அரபு மொழி பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

இதுதொடர்பாக அரசு வெளியிட்ட செய்தி குறிப்பில், "வணிகம், வியாபாரம், கல்வி போன்ற காரணங்களுக்காகத் தமிழர்கள் தொன்றுதொட்டு வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு சூழ்நிலைகளால் சில நேரங்களில் இன்னல்களுக்கு ஆளாகின்றனர். அயல்நாடுகளுக்கு பணிக்குச் செல்லும் தமிழர்களுக்கு உறுதியளித்தபடி வேலை, வேலை நேரம், ஊதியம், உணவு, உறைவிடம், போன்ற பல்வேறு விசயங்கள் தொடர்பாக ஏற்படும் பிரச்சனைகளுக்கு, தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையைத் தொடர்பு கொள்கின்றனர்.

அவ்வாறு அயலகத் தமிழர்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கைகள் அயலகத் தமிழர் நலத்துறை மூலமாக அந்தந்த நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தமிழ்ச் சங்கங்கள் உதவியுடன் தீர்வு காணப்பட்டு வருகின்றன. இதுபோன்ற குறைகளைச் சரிசெய்யக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காகத் தமிழர்கள் புலம்பெயரும்போது, அவர்கள் செல்லும் நாட்டின் சட்ட திட்டங்கள், கலாச்சாரம், மொழி மற்றும் வேலை தொடர்பான குறைந்தபட்ச முன் தயாரிப்புடன் செல்ல ஏதுவாக ஏற்கனவே சென்னையில் முன் பயணப் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காகத் தமிழ் நாட்டிலிருந்து செல்லும் இளைஞர்கள் இது குறித்து போதிய முன் அனுபவமோ போதிய தகவல்களோ இல்லாமல் செல்லும் நிலையே உள்ளது. அதுமட்டுமின்றி அவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு குறித்த விழிப்புணர்வு பெறத் தேவையான முன்பயண புத்தாக்க பயிற்சி பெற நீண்ட தூரம் பயணித்தும், கூடுதல் செலவு செய்தும் சென்னைக்கு வர வேண்டிய நிலையே உள்ளது. அரசின் நலத் திட்டங்கள் அனைத்தும்




அவரவர் வசிக்கும் பகுதியிலேயே வழங்கப்பட வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் நோக்கம். இந்த அடிப்படையில் 'முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம்' சென்னை மட்டுமின்றி வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பிற்காகச் செல்பவர்கள் அதிகம் உள்ள இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ் சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்திடும் வகையில் ரூ.54 லட்சத்து 75 ஆயிரம் செலவில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையங்கள் அமைத்து தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த முன் பயண புத்தாக்கப் பயிற்சி மையத்தில், வேலைத்தேடி வெளிநாட்டிற்குச் செல்லும் அனைவருக்குமான முன் பயண புத்தாக்க பயிற்சி, கட்டடத் தொழிலாளர், ஓட்டுநர், எலக்ட்ரீசியன் மற்றும் வீட்டு வேலை போன்ற பணிகளுக்காகச் செல்பவர்களுக்கு இப்பணிகளுக்கான அடிப்படைத் தேவையான கல்வித் தகுதிகள் மற்றும் ஆவணங்கள் தொடர்பான தெளிவுகள் ஏற்படுத்துதல். ஆங்கிலம் மற்றும் அரபு மொழி தொடர்பான அடிப்படை பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இந்த பயிற்சிகளுடன் தேவைக்கேற்ப வீட்டு உபயோக மின் சாதனப் பொருட்களைக் கையாளுதல் போன்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், வெளிநாடு செல்ல விரும்புவோரும் இந்த பயிற்சியில் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, வரும் ஜனவரி 12ஆம் தேதி முதலமைச்சர் தலைமையில் அயலகத் தமிழர் தினம் கொண்டாடப்பட உள்ளதாகவும், அப்போது தமிழ் இலக்கியம் உள்ளிட்ட 8 பிரிவுகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழர்களுக்கு விருது வழங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- ம.திலிப் குமார்**

# தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை



1. தந்தைக்கு முன்பு குரலை உயர்த்தாதீர்!
அவ்வாறு செய்தால் இறைவன் உங்களை தாழ்த்தி விடுவான்.

2. தந்தையின் கண்டிப்பை பொருத்து கொள்ளுங்கள்!
அதனால் உங்களுக்கு மரியாதை கிடைக்கும்

3. தந்தைக்கு மரியாதை செய்யுங்கள்!
அதனால் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு மரியாதை செய்யக் கூடும்!

4. தந்தை சொல்வதை கவனமாக கேளுங்கள்!
ஏனென்றால் பிறர் நமக்கு ஏதும் சொல்லும் நிலமை வரக் கூடாது?

5. தந்தைக்கு முன்பு பார்வையை தாழ்த்தி கொள்ளுங்கள்!
அதனால் இறைவன் மக்கள் பார்வைக்கு முன்பு உயர்ந்த கண்ணியம் அளிப்பான்!

6. தந்தையின் வாழ்க்கை அனுபவங்கள் நமக்கு தெளிவான ஒரு புத்தகம் ஆகும்!
அந்த ஒவ்வொரு பக்கத்தைக் கொண்டு பாடமாக எண்ணி பயன் அடைந்து கொள்ளுங்கள்.

7. தந்தை என்பவர், அனைவரையும் விட, மிக சிறந்த முறையில், நமக்கு நன்மை செய்யக் கூடியவர்

8. மிகவும் அழகாக முறையில் நம்மை பாதுகாக்க கூடியவர் ஆவார்.

9. முகம் தெரியாத யாருக்கோ மரியாதை செய்கிறோம். உன்னை கொஞ்சி வளர்த்த தந்தைக்கு முன்பு மரியாதை செய்.

10. அவருக்கு செய்ய வேண்டிய கடமைகளில், குறை வைத்து விட வேண்டாம்.

தாய் தன் பிள்ளை பத்திரமாக இருக்கணும்னு மார்பில் அனைத்துக் கொள்வாள்.

ஆனால் தந்தைதான் பார்க்காத உலகத்தையும் என் பிள்ளை பார்க்க வேண்டும் என்று தன் தோழின் மேல் தூக்கி நான் பார்க்காத உலகத்தை நீ பார் என்பவனே தந்தை.

அவர் உன்னுடைய அருகில் இருக்கும்போது பயன் படுத்துக் கொள். தந்தையை போல் உண்மையான நண்பன் இந்த உலகத்தில் யாரும் இல்லை...

**- தமிழ் வீரன்**


PENA KURAL TAMIL MONTHLY

# பேனா குரல்

**PENA KURAL**

**தமிழ் மாத இதழ்**

**உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் :**
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா. சி**, B.E.,

துணை ஆசிரியர்கள் :
**துரை. சந்துரு, ந.மதிவாணன், M.சந்திரசேகர், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி, T.சிவக்குமார், M.அறிவுநிதி**

தலைமை நிருபர்கள் :
**பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், பா.சரவணன், A.தங்கராஜ், K.மாரிதுரை, ம.திலிப் குமார்**

நிருபர்கள் :
**Ba.சரவணன், தமிழ் மணி, உ.சரவணன், கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக், தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ், பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,**

புகைப்பட நிருபர்கள் :
**வா.கவியரசன், கா.மிதுன் சாய்**

ஓவியங்கள்: **வீ.சந்தோஷ் குமார்**

சட்ட ஆலோசகர்: **G. நாகராஜ்**, B.Sc., LLB.,

**இதழ் வடிவமைப்பு:** *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம் :
**பேனா குரல்**
**3/885, பிள்ளையார் கோவில் தெரு, மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை, தமிழ் நாடு, இந்தியா - 600097.**

தொடர்புக்கு :
**044-35906002, 9962245338**
**info@penakural.com**
**penakural@yahoo.com**
**www.penakural.com**

* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது. *


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
ROYAL ENFIELD
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine Re - work
High Quality
MOTUL
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

**PENA KURAL,** Tamil Monthly, December 2023
Registrar of Newspapers for India - Registered No.: **TNTAM/2022/85375**




Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**